egistered as a Newspaper in Ceylon

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

| ஈழநாடு சந்தா விபரம் இந்தியா — இலங்கை | வாரப்பதிப்பு உட்பட | வாரப்பதிப்பு மட்டும் |
|---|---|---|
| 1 வருடம் | 48-00 | 3-00 |
| 6 மாதம் | 25-00 | 6-50 |
| 3 மாதம் | 13-00 | 3-25 |

போன் 389 National Tamil Daily தேசிய தினசரி தபாற்பெட்டி எண்: 49

மலர் 6 யாழ்ப்பாணம் குரோதி சித்திரை 26 ஆம் நாள் துல்ஹஜ் 25 (8-5-64) வெள்ளிக்கிழமை இதழ் 87

# "முதலில் எம்முடன் உடன்பாடு காணவும்

## அதன்பின் இந்தியாவுடன் உடன்பாடு செய்து கொள்ளலாம்"

### அப்துல்லாவுக்கு அயூப் கடிதம்

பாகிஸ்தான் அரசாங்கத்துடன் காஷ்மீர் சம்பந்தமாக ஒரு உடன்பாட்டுக்கு வந்த பின்னரே இந்திய அரசாங்கத்துடன் ஒரு உடன்பாட்டுக்கு வரவேண்டும் என்று பாகிஸ்தான் அதிபர் பீல்ட் மார்ஷல் அயூப்கான் காஷ்மீர் முன்னாள் பிரதமர் ஷேக் அப்துல்லாவைக் கேட்டுள்ளார்.

இப்பொழுது புதுடில்லியில் தங்கி இந்திய அரசாங்கத் தலைவர்களையும் அரசியல் பிரமுகர்களையும் சந்தித்து காஷ்மீர் பிரச்னை சம்பந்தமாகப் பேச்சுவார்த்தை நடத்தி வரும் ஷேக்அப்துல்லாவுக்கு பாகிஸ்தான் அதிபர் எழுதிய கடிதம் நேற்று புதுடில்லியிலுள்ள பாகிஸ்தான் ஹைகமிஷனர் மூலம் ஷேகஅப்துல்லாவிடம் சேர்க்கப்பட்டது.

காஷ்மீர் பிரச்னை சம்பந்தமாக தம்முடனோ அல்லது தமது சகாக்களுடனோ கலந்தாலோசனை செய்து ஒரு உடன்பாட்டுக்கு வரும் வரை இந்திய அரசாங்கத் தலைவர்களுடன் எவ்வித உடன்பாடும் செய்துகொள்ள வேண்டாம் என்று அதிபர் அயூப்கான் தமது கடிதத்தில் அப்துல்லாவைக் கேட்டுள்ளார்.

பாகிஸ்தானுக்கு விஜயம் செய்யுமாறு திரு. ஷேக்அப்துல்லாவை அயூப்கான் மீண்டும் அழைத்துள்ளார்.

முன்னாள் இந்திய நிதிமந்திரி மொரார்ஜி தேசாயை ஷேக்அப்துல்லா இன்று காலை சந்தித்துப் பேசினார்.

## கூட்டரசாங்கம் சமாளிப்பென்கிறார் எம். பி.

வவுனியா, வியாழன்

கூட்டரசாங்கம் என்று சொல்வதெல்லாம் வெறும் சமாளிப்பே என்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியே தொடர்ந்து ஆட்சி செய்யுமென்றும் முல்லைத்தீவு முற்றவெளியில் நடைபெற்ற மேதினக் கூட்டத்தில் பேசுகையில் வவுனியா எம். பி. திரு. த. சிவசிதம்பரம் தெரிவித்தார்.

தொழிலாளர்களின் ஆதரவைத் தேடி அரசியல் கட்சிகள் செல்வதாகவும், அக் கட்சிகளால் ஏமாற்றப் படாமலிருக்க தொழிலாளர்கள் பார்த்துக் கொள்ள வேண்டும் எனவும் அவர் தொழிலாளர்களைக் கேட்டுக் கொண்டார்.

தங்கள் தொழில் உரிமைக்கு போராடுவதுடன் தமிழ்ப் பகுதிகளை அபிவிருத்தி செய்யும் கடமையும் தமிழ் பேசும் தொழிலாளர்களிடம் இருக்க வேண்டியது அவசியம் என திரு. எஸ். கதிரவேற்பிள்ளை இக்கூட்டத்தில் பேசுகையில் தெரிவித்தார்.

## 21 கோரிக்கைகளை எப்பொழுது சமர்ப்பிப்பது

### தொழிற்சங்க பிரதிநிதிகளிடையே கருத்து வேறுபாடு

கொழும்பு, வியாழன்

இருபத்தொரு கோரிக்கைகள் பற்றி இறுதிமுடிவு செய்து அவைச் சமர்ப்பிப்பதுபற்றி ஆராய்வதற்காக நேற்றிரவு நடைபெற்ற தொழிற்சங்கங்களின் இணைப்புக் கமிட்டியின் கூட்டம் எவ்வித முடிவுமில்லாமலே கலைந்தது.

கோரிக்கைகளை இப்பொழுது சமர்ப்பித்து அதற்காக இச்சந்தர்ப்பத்தில் போராடுவதென்பது இந்த நாட்டின் தொழிற்சங்க சரித்திரத்துக்கே ஒவ்வாதென டாக்டர் என். எம். பெரேரா தெரிவித்தார். ஒவ்வொரு அம்சமும் தீர்க்கமான முறையில ஆராயப்பட வேண்டுமெனவும் அதன்படி திட்டமிடப்பட வேண்டுமெனவும் தொழிற்சங்கங்கள் யாவும் போராட்டத்துக்கு தயாராகியபிறகே அவற்றை சமர்ப்பிக்க வேண்டுமெனவும் டாக்டர்பெரேரா தெரிவித்தாராம். போராட்டத்தை ஆரம்பிப்பதற்கு அடுத்தமாத முதல் கிழமைவரை தாமதித்து இருக்குமாறு திரு. பெரேரா கூட்டத்தினரைக் கேட்டுக் கொண்டார். மற்றும் தொழிற்சங்கப் பிரமுகர்கள் தமது தொழிற்சங்கங்கள் போராட்டத்துக்கு தயாராயிருப்பதாகவும் கோரிக்கைகளை உடனடியாக சமர்ப்பிக்க வேண்டும் என்றும் தெரிவித்தனர்.

நாலு மணித்தியாலங்கள் பெரும் அமளியுடன் நடைபெற்ற இக்கூட்டத்தில் எவ்வித தீர்க்கமான முடிவும் செய்யப்படவில்லை. டாக்டர் பெரேரா கூட்டம் முடியுமுன்னரே கூட்டத்தை விட்டுச் சென்றுவிட்டார். ஜூன்மாதம் 6-ம் திகதி மீண்டும் இதுபற்றிய பரிசீலனை செய்யக் கூடுவதென கமிட்டி தீர்மானித்தது.

ஆனால் பிரபல தொழிற்சங்கவாதி ஒருவர் கோரிக்கைகளை உடனடியாகச் சமர்ப்பிப்பதுபற்றி ஆராய்வதற்கு அடுத்த கிழமை வருமாறு மற்றும் தொழிற்சங்கப் பிரதிநிதிகளை கேட்டுக் கொண்டதாக அறியப்படுகிறது.

## சுதந்திரக்கட்சி நிர்வாக சபை நாளை கூடுகிறது

கொழும்பு, வியாழன்

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின நிர்வாகசபைக் கூட்டம் சனிக்கிழமை நடைபெறவிருக்கிறது. இடதுசாரி ஐக்கிய முன்னணியுடன் சேர்ந்து கூட்டு அரசாங்கம் அமைப்பது பற்றிய பிரச்சினை இக்கூட்டத்தில் முக்கிய இடம்பெறுமென்றும் கூட்டததில் பரபரப்பான சம்பவங்கள் இடம் பெறக்கூடுமென்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

இடதுசாரி ஐக்கிய முன்னணியுடன் சேர்ந்து கூட்டு அரசாங்கம் அமைப்பதை ஆதரிபவர்களுக்கும், எதிர்ப்பவர்களுக்கும் இடையில் பலத்த வாக்குவாதம் ஏற்படலாமென்றும் கூறப்படுகிறது.

திரு. சி. பி டி. சில்வாவையும், திரு. மைத்திரிபால சேனநாயக்காவையும் எக்காரணம் கொண்டும் மந்திரிசபையிலிருந்து நீக்கக்கூடாதென்று சிலர் இக்கூட்டததில் வற்புறுத்தவிருப்பதுடன் திரு பிலிப் குணவர்த்தனவை மந்திரிசபையில் சேர்க்கக்கூடாதென வலியுறுத்துவார்களெனவும் கூறப்படுகிறது.

கூட்டு அரசாங்கம் அமைப்பது சம்பந்தமான பேச்சுவார்த்தைகள் பற்றி பிரதமர் டக்கூட்டத்தில் விளக்கிக் கூறுவாரென்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

---

### இன்று

மாலை 6 மணிக்கு வண்ணை வைத்தீஸ்வரன் தேவஸ்தானத்தில் நல்லூர் பஜனைச் சபை உறுப்பினர் திரு. எஸ். பாலசுப்பிரமணியத்தின் கதாப்பிரசங்க அரங்கேற்றம் நடைபெறும். "வள்ளியம்மை திருக்கல்யாணம்" என்ற தலைப்பில் அவர் கதாப்பிரசங்கம் செய்வார்.

மாலை 6 மணி முதல் அகில இலங்கை பொதுஜன சேவைச் சங்கச் சமயப் பிரசார சபையினரின் ஆதரவில் நல்லூர் தேவஸ்தான சண்முக தீர்த்த மண்டபத்தில் திரு. த. சுப்பிரமணியம் "கண்ணப்ப நாயனர்" என்னும் பொருள் பற்றி கதாகாலக்ஷேபம் செய்வார.

---

### பாம்பு தீண்டியது

பளை, வியாழன்

பளை புகையிரத நிலையத் தொழிலாளியான சுப்பையா என்பவரை கடந்த ஞாயிற்றுக் கிழமை நாகபாம்பொன்று தீண்டியுள்ளது. தீண்டப்பட்டவர் சிகிச்சை பெற்று குணமடையும் சமயத்தில் அதே நாகபாம்பினல் மீண்டும் திங்களன்று தீண்டப்பட்டார். பிரஸ்தாப நபர் தற்போது ஆபத்தான நிலையில் இருப்பதாக அறியக்கிடக்கிறது.

## தென்னிலங்கை மீனவர் குடியேற்றம்

மட்டக்களப்பு, வியாழன்

தென்னிலங்கையைச்சேர்ந்த பெரும்பாலான சிங்கள மீனவர் குடும்பங்கள் தற்போது கிழக்கிலங்கைக் கரையோரப் பகுதிகளில் வந்து குடியேறியுள்ளனர். மட்டக்களப்பு பகுதியையச் சேர்ந்த கல்குடா கதிரவெளி, வெலிக்கந்தை, ஏருவூர், வாகனேரி, முகத்துவாரம், பாலமீன்கடு ஆகிய பகுதிகளில் தற்போது இவர்கள் குடியேறியுள்ளனர்.

கொச்சிக்கடை, நீகொழும்பு சிலாபம், புத்தளம் ஆகிய பகுதிகளிலிருந்து இங்கு வந்துள்ள இம் மீனவர் குடும்கள் சுமார் 6 மாத காலத்திற்கு இப்பகுதிகளில் மீன்பிடித் தொழில் ஈடுபடுவார்கள். இவர்கள் அனைவரும் இயந்திரப் படகுகளில் ஆழ்கடலுக்குச் சென்று மீன் பிடிப்பது குறிப்பிடத்தக்கது.

## உதவிப் பணம் பெறுவதில் காசநோயாளர் கஷ்டம்

யாழ்ப்பாணம், வெள்ளி

காசநோயாளர்களுக்கு அரசாங்கம் மாதாந்தமாகக் கொடுத்துதவும் பணம் அவர்களுக்கு கிடைக்கிறதில்லையென காசநோயாளர் பலர் முறையிட்டுள்ளார்கள்.

காச நோயினல் ஒரு ஏழை வருந்துவாராலுல் அவருக்கும் அவருடைய குடும்பத்துக்குமென அவருடைய நோய் மாறும்வரை மாதாந்தம் அரசாங்கம் அவருடைய பொறுப்புக்கேற்ற மாதிரிப் பணம் கொடுக்கும் ஒழுங்கு உண்டு.

மார்புநோய் நிபுணரின் வைத்திய சான்றுபபத்திரம் பெற்று சமூக சேவை இலாகாவுக்கு அனுப்பியே இப்பணத்தைப் பெறலாம். வைத்திய சான்றுப் பத்திரம் மூன்று மாதத்திற்கொருமுறை புதுப்பிக்கப்படுதல் வேண்டும். அப்பத்திரம் சமூக சேவை இலாகாவுக்கு அனுப்பப்பட்டதும் நோயாளரின் தகுதிபற்றி விசாரணை செய்ய சமூக சேவைப் பரிசோதகருக்கு அனுப்பபடும். விசாரணை முடிந்து பணம் பெறுதற்கான கட்டளை நோயாளர் வசம் வந்துசேர மூன்று மாதத்திற்கு மேலும் செல்கிறதாம், அதனல் முதல் மூன்று மாதப் பணமும் பெறமுடியாது தவிக்கின்றனர். சில சமயங்களில் உண்மையாக உதவிப் பணம் பெறும் தகுதியிருந்தும் சமூக சேவை இலாகாவுக்கு அனுப்பபட்ட வைத்திய சான்றுப் பத்திரம் திருப்பியனுப்பப்படுவதேயில்லையாம்.

இதுபற்றிக்காச நோயாளர்கள் சமூக சேவா மந்திரிக்கு ஒரு மகஜர் அனுப்பத் தீர்மானித்துள்ளனர்.

---

### தற்கொலை

காங்கேசன்துறை, வியாழன்

வசாவிளான் குட்டியப்புலத்தைச் சேர்ந்த தம்பன் குட்டியன் கிருஷ்ணசினி அருந்தித் தற்கொலை செய்துகொண்டார். குடும்பஸ்தரான இவரின் மரணம் சம்பந்தமாக நடத்தப்பட்ட மரணவிசாரணை முடிவில் தற்கொலை எனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

### மணிவாக்கு

குறைவாகப் பேசுபவர் சாதாரணமாக யோசிக்காமல் பேசமாட்டார்கள். ஒவ்வொரு வார்த்தையும் அளந்துபேசுவர். மௌனம் ஆத்மசோதனைக்கு மிகவும் உதவியாக இருக்கும்.

— மகாத்மாகாந்தி

ஈழநாடு
EELA NADU
EELA NADU National Tamil Dail, Post Box 49, Jaffna
Telegram. EELA NADU Jaffna
Phone 389

யாழ்ப்பாணம் குரோதி ஆண்டு சித்திரை மீ 26 உ (8-5-64)

## காமன்வெல்த் பிரதமர்கள் மகாநாடு

வருகிற ஜூலை மாதம் 8 முதல் 15-ந் திகதி வரையில் லண்டனிலே நடைபெறும் காமன்வெல்த் பிரதமமந்திரிகள் மகாநாட்டில் இலங்கை இந்தியா உள்ளிட்டு 18 நாடுகளின் பிரதமர்கள் கலந்து கொள்ளுகின்றார்கள். அவுஸ்திரேலியா, கனடா, இலங்கை, சைப்பிரஸ், கானா, இந்தியா, ஜமெக்கா, கினியா, மலேஷியா, நியூஸிலாந்து, நைஜீரியா, நியாஸாலந்து, பாகிஸ்தான், ஸிராலியோன், தங்கனிகா, டிரினிடாட், உகண்டா பிரிட்டன் முதலிய நாடுகள் இதில் கலந்து கொள்வதால் புதிதாக விடுதலை அடைந்த காமன்வெல்த் நாடுகளின் பல சிக்கலான பிரச்சினைகளையும் சுமுகமாகத் தீர்த்துக்கொள்ள இது நல்லதோர் சந்தர்ப்பமாகும்.

உதாரணமாக இலங்கை-இந்தியா பிரச்சினையை எடுத்துக் கொள்வோம். இது குறித்து பல்லாண்டுகளாக இருதேசப் பிரதமர்களிடையேயும் பேச்சுகள் நடந்துள்ளதெனினும் இதுவரை இப்பிரச்சினை சுமுகமாகத் தீர்க்கப்படவில்லை. இதற்கு மாறாக இங்குள்ள சுமார் பத்துலட்சம் மக்களும் 'நாடற்றவர்'களாக்கப்பட்டு, பலவிதஇன்னல்களுக்கும் உள்ளாகி வருகின்றனர். இருதேசப் பிரதமர்களும் லண்டனில் சந்திக்கையில் இப்பிரச்சினையைப்பற்றிப் பேசலாமென்று கொழும்புச்செய்தியொன்று கூறுகின்றது. ஆனால் அப்படிப் பேசுவதால் இம்முறை தங்களுக்கு ஒருவிமோசனம்பிறக்குமென்று அம்மக்கள் நம்ப முடியாதபடி இங்கு சூழ்நிலை இருந்து வருவதைப் பார்க்கின்றோம்.

"நாடற்றவர்கள்" என்று சொல்லப்படும் இம்மக்களையெல்லாம் அல்லது அவர்களில் அநேகமாக அனைவரையும நாடு கடத்திவிட வேண்டுமென்பதே இங்கு அரசாங்கக் கட்சி உட்பட பலகட்சிகளின் நோக்கமாகும். இலங்கைசிறிய நாடென்றும் சுமார் பத்துலட்சம் மக்களையும் இங்கு பிரஜைகளாக்க முடியாதென்றும் பெரிய நாடான இந்தியாவில் கைத்தொழில்கள் முன்னேறி வருவதால் இம்மக்களை இந்தியா சுலபமாக ஏற்றுக் கொள்ளலாமென்றும் வாதிக்கப்படுகின்றது. அப்படித் திரும்புபவர்களுக்கு இலங்கை உதவிப்பணமும் அளிக்க இப்போது முன்வந்துள்ளதாகவும் சுட்டிக்காட்டப்படலாம்.

இதேசமயம் "நாடற்றவர்"களில் அநேகமாக அனைவரும் இலங்கையில் பிறந்தவர்கள். மனிதஉரிமை சாசனப்படி அவர்கள் இங்கு மற்றவர்களைப்போல் சரிசமாக வாழுவது தங்கள் பிறப்புரிமை என்று வாதிக்கின்றனர். உதவிப்பணத் திட்டத்தை அவர்களில் ஒருசிலரும் பயன்படுத்தி இந்நாட்டை விட்டு வெளியேறச் சம்மதிப்பார்களா என்பது சந்தேகம். ஏனெனில் இந்த சொந்தப் பணம் ஒருசில நாட்களில் கரைந்துவிடும். இந்தியாவில் புதுவாழ்வு ஆரம்பிக்க இது போதாது. மேலும் புதிதாக விடுதலை அடைந்த பலகாமன்வெல்த் நாடுகளிலிருந்தும் குடியேறிய இந்திய வம்சாவளியினர் பெருமளவில் விரட்டப்படுவதாலும் ஏற்கெனவே இந்தியாவிலே ஏழ்மை அதிகமிருப்பதாலும் இந்தியாவுக்கு திரும்பிச் செல்ல அவர்கள் சம்மதிக்கமாட்டார்கள்.

இந்த தர்மசங்கடத்துக்கு என்ன செய்வது? பாகிஸ்தானிலிருந்து மட்டுமன்றி பர்மா, ஸான்ஸிபார், பிஜி, இலங்கை முதலிய பலபல நாடுகளில் பிறந்த இந்திய வம்சாவளியினர் லட்சக்கணக்கில் விரட்டப்படும் கன்றாவியைப் பார்க்கின்றோம். காமன்வெல்த் நாடுகள் பலவும் அரசியல் விடுதலை பெற்றதன் விளைவுதான் இது. இந்த மனிதப் பிரச்சினையை மனிதாபிமானத்துடன் தீர்க்க முடியாவிடில் "காமன்வெல்த் குடும்பம்" என்பது வெறும் கேலிக்கூத்தேயாகும்.

பலமுக்கிய வேலைகளையும் விட்டுவிட்டு லண்டனுக்குச் செல்லும் பிரதமர்கள் இந்த மனிதப பிரச்சினையை எப்படி மனிதாபிமானத்துடன் தீர்ப்பது என்ற பொதுக் கொள்கையை வகுத்துக் கொள்ள இந்த மகாநாடு நல்லதோர் சந்தர்ப்பமாகும். இது இந்தியா-இலங்கை இவ்விரு நாடுகளை மட்டும் பொறுத்த விஷயமல்ல, காமன்வெல்த்தைப்பற்றிய மனிதப் பிரச்சினை. 'காமன்வெல்த்' என்பது வெறும் கேலிக்கூத்தாகிவிடாமல் தடுக்க வேண்டுமானால் இந்தப் பிரச்சினையைச் சுமுகமாகத் தீர்க்க பிரிட்டன் உள்ளிட்டு பல காமன்வெல்த் பிரதமமந்திரிகளும் தக்க கொள்கையை விரிந்த மனப்பான்மையுடன் தீர்க்க முற்பட வேண்டும். மக்கள் சக்தியே ஒருநாட்டின் மேலான செல்வம் என்பதை நினைவுகூர்ந்தால் இந்தமனிதப் பிரச்சினை அதிக சுலபமாகத் தீர முடியும். மற்றவர்களைவிட இதில் பிரிட்டனுக்கே அதிக பொறுப்பும் கடமையுமுண்டு.

# முதுதமிழ்ப் புலமையெய்திய பண்டிதர் நல்லதம்பி

## இன்று அவரது 13 வது அமரதினம்

**தமிழுக்கு அளப்பரிய சேவை செய்தவர்களின் வரிசையில் வைத்து எண்ணத்தகும் வட்டுக்கோட்டையூர் முதுதமிழ்ப்புலவர் திரு. மு. நல்லதம்பி அவர்களின் 13வது அமரதினம் இன்றாகும். அன்னாரின் தமிழ்த்தொண்டினை நினைவு கூருமுகமாக வட்டூர் இளைஞர் மன்றத்தார் வெளியிட்ட "இளைஞர் விருந்து" என்னும் புலவரின் கவிதைத் தொகுப்புக்கு பண்டிதர் பொ. கிருஷ்ணபிள்ளை வழங்கிய அணிந்துரையிலிருந்து ஒரு பகுதியை இங்கு வெளியிடுகிறோம்.**

சுவைமிக்க இலக்கியப் பேச்சாளரும் கவிதையியற்றுவதிலே திறன் வாய்ந்தவருமாகிய ஒருவரை நான் நன்கறிந்திருந்தேன். அவர் திடீரென மரணமானார். வாழவேண்டிய வயதில் இவர் இப்படி எங்களெல்லாரையும் ஏமாற்றிப் பொல்லாப்புச் செய்யக் காரணம் யாதோவெனச் சிந்தித்தேன். அதற்கு விடை அவரியற்றிய பாடலொன்றினை நான் வாசித்த பொழுது கிட்டிற்று

...............உள்ளம் விரிந்திட
வானம் சென்றும் வளர்ப்பம் அறிவினை

என்ற பகுதி. அவர் தம் அருமந்தஇலக்கியத் தாகத்தைத் தீர்க்கவே வான்சென்றாரென விடைபகர்ந்தது. இளமையிலேயே முதுதமிழ்ப்புலமையெய்திய அறிஞர் நல்லதம்பியைப் பொதுவாக இலங்கைத் தமிழ் மக்கள் நன்கறிவர். அரசாங்கம் அவரியற்றிய மருதனேட்டப் பாடலுக்குச் செய்த சன்மானம் அவரை எல்லோருக்கும் அறிமுகமாக்கிற்று. அவர் மொழிபெயர்த்தியற்றிய இலங்கைத தேசியகீதம் அவர் புலமைக்குச் சான்று பகருகின்றது

இவர் பாடல்களைப் படிக்கும் பொழுது உள்ளத்திலே உணர்ச்சியும் இன்பப் பெருக்கும் எழுகின்றன. சொல்வளமும் கருத்து வளமும் பொருந்திய பல கவிதைகளை இவர் பாடற்றொகுதியிலே காணலாம். பாடலுக்கு உடல் வளம் போன்றிருப்பதாகிய நற்சந்தம் இவர் பாடலிற் பற்பல இடங்களிற் புலப்படுகிறது.

"கறுத்த உடல் வெளுத்த
நகைக்
குறத்தி யிரே வாரீர்
சிறுத்த இடைக் கறுத்த
உடைச்
சிறுக்கி நீ ரெவ்வூரீர்"
(குறத்தியும் சிறுவனும்)

"கடிக்க வந்தாற் பிடிக்க
வேணும்
காசு தருவோமே
கொடிக்கு ளித னுட்டங்
காட்டில்
நுமக்கு நன்றி யாமே"
(குறவனும் பிள்ளைகளும்)

இப்பாடற் பகுதிகளிலும் 'பாலரெல்லாம்' 'கிழமைகள்' என்ற தலைப்பின் கீழ்வரும் பாடல்களிலும் சந்த இன்பச் சுவை இன்பந் தந்திடுகிறது.

சந்த அழகோடு கூடிப் பொருளை அப்படியே நமக்கு முன்னே படம்பிடித்து நல்லுணர்ச்சியெழுப்பும் உயிரூட்டமுள்ள பாடல்களுக்கு இந்நூலிற்குறைவில்லை.

கூதிர் காலம் முழுவதும் அத்தகையதே.

"கூதிர் வந்தது கூதிர் வந்தது கூதிர் வந்ததம்மா, கொடு கொடுக்குது கொடு கொடுக்குது கொடு கொடுக்குதம்மா, இடியிடிக்கிற திடியிடிக்கிற திடியிடிக்குதம்மா, இருட்டினிடையே பளிச்சென மின்னலெழுந்து மின்னுதம்மா, மடைதிறந்தெனக் குளங்களோடைகள் வழிந்து பாயுதம்மா"

கூதிர் இப்படியிருக்காது வேறு எப்படி இருக்கும்

"கடலில் அலையெழுந்து மலை
யெனவே—பொங்கக்
கலக்கி மரஞ்செடிகள்
குலுக்குவையே
உடலிலுறவை யுன்றனுருவ
மென்னும்
எனக்காற்றின் சேட்டையைப்"

பற்றிப்பிள்ளை கேட்பதாக வேறெப்படிக் காட்ட முடியும்.

ஆதோ ஆற்றின் ஆரவாரப் பாய்ச்சல்.

"உரண்டு புரண்டு வந்தேன்—
கல்
உடைத்துப் பரலை
யுதைத்துக் கிளப்பித்
திரண்டு குமுறி வந்தேன்—
பலப்பல
திட்டைகள் குட்டைகள்
முட்டி முட்டி வந்தே"ன்

"குந்திமுன்னங் கால்களைக்
குவித்துக் கையென்றாக்குவாய்
கொந்திக் கொந்திக் காய்பழம்
கொட்டையுணவாக்குவாய்"

அணில் கொட்டை கொறித்துண்ணும் விசித்திரம் நாமின்றுங் காண்பது போல் இத்தகையதே. பாட்டில் அமைந்த படம் எத்துணை விசித்திர உணர்ச்சியை இதயத்தெழுப்புகின்றது. நாங்கள் பூவியற்றுபடிக்கும் விந்தை வேடர் வாழ்க்கை அப்படியே சித்திரமாக நம் கண்முன் இவர் பாடலைப்படிக்கும் பொழுது காட்சி தருகின்றது.

இன்றைய உலகமே விஞ்ஞான மயமாகி மாறிவருகின்றது. இச்செயற்கை உலகிலே உளத்திற்கு உவகைதரும் தனிக்கற்பனைக்கு விளக்கமுங் கொடுக்காவிடில் உலகியலார் அதனை ஏற்றுக்கொள்ளார். ஆகவே குழந்தைக்கும் இப்புலவர் சாத்திர உண்மைகளை நன்முறையிற் புகட்டுகின்றார்.

'ஏழுநிறக் கதிரை யியல்பா
யுடைமையினால்
ஏழு குதிரை யிவர்கின்றா
யென்போ மால்
நாளும்புவிசுழல நன்மையன்றோ
நீ மகிழ்ந்து
சூழுகின்றா யென் பேஞ்
சுடர்மணியே வாழியவே'
(வெயிலவனும் வெயிலும்)

'மின்சாரம்' என்ற தலைப்பின் கீழ் வரும் பாடல்களும் விஞ்ஞானத்தின் நலத்தையும் அது செய்யும் கொடுமைகளையும் எடுத்தியம்புகின்றன

சிற்சில உண்மைகளை, குழந்தைகளை ஆக்கப் பாட்டு வழியிற் செலுத்துங்கால் இப்புலவர் உபதேச முறையியம்புகின்றார், கவிதையோடு உணவினையும் வேண்டிநிற்கு மூலகிற்கு இவற்றையெல்லாங் காட்டவேண்டியது அவசியமானதே.

'வெளிமினுக்கில் மயங்கி நிற்கும்
ஈழநாடே—முன்னோர்
வெற்றி வாழ்க்கை மறந்து
விட்டாய் ஈழநாடே
தெளிவுனக் கென்நாள் வருமோ
ஈழநாடே—மேலைத்
தேய வாழ்வில் மோகங்
கொண்டாய் ஈழநாடே'

கல்வியென்னுல்யாது? அதன் குறிக்கோள் யாதாயிருக்க வேண்டும் என்ற உண்மையையும் மணியனைய குழந்தைக்கு இவர் நயமுற ஓதுகின்றார்.

'என்னையா னெந்தப்
பொழுதினுங் காக்க
வியன்றவ னென்னக்
கலைபடிப்பாய்
பின்னை யொருவ ருதவியிலாது
பிழைக்க வகை தெரி கண்
மணியே'
(வெறுங் கல்வி)

ஏழைத் தொழிலாளரைப் பிள்ளைக்கு அறிமுகப்படுத்தி அவரின்றி உலகுவாழ முடியாதென மனித சமூக வாழ்வுக்குரிய தொழில்களில் இழிவு இல்லையென்னும் இவர் செய்யும்-இன்றைய உலகிற்குத் தேவையான- உபதேசத்தை 'தொழிலாளர்' என்ற தலையங்கத்தின் கீழ்க்காணலாம்.

இவர் பாடல்களை நாம் படிக்கும் பொழுது குழந்தைகளை எத்தனை எத்தனை முறைகளால் வசீகரித்து இவர் பாடுகின்றார் என்பது தெளிவாகும்' பிள்ளைகள் மனதிற்குகந்த பொருள்களைப்பற்றிப் பாடுகின்றார். அவை தம் சரிதையைக் கூறும் பாவனையிலே பிள்ளைகள் மனதைப் பிணிக்கின்றார். சில இடங்களிற் சம்பாஷணையைக்

(5-ம் பக்கம் பார்க்க)

## ஐயாறன் எழுதுவது

கோடீஸ்வரன் வழக்கிலே சுப்ரீம்கோர்ட்டுக்கு அப்பீல் செய்துகொள்ள அரசாங்கம் முன்வந்துவிட்டது. இனி இதைப்பற்றி எதையும் எழுதுவது நீதிமன்றத்தை அவமதிக்கும் குற்றமாகும்.

ஆனால் மொழிப் பிரச்சினையைச் சுமுகமாகப் பேச்சு வார்த்தை மூலம் தீர்த்துக் கொள்ள, மாவட்ட நீதிபதியின் தீர்ப்பு ஒரு நல்ல சந்தர்ப்பமளித்துள்ளதாயும், இதை அரசாங்கம் பயன்படுத்தவேண்டுமென்றும் கூறிவந்தவர்களுக்கு, அரசாங்கம் செய்துள்ள இந்த முடிவு ஒருவித ஏமாற்றமளிக்கும்.

மொழிப் பிரச்சினையைச் சோஷலிஸ்ட் கட்சிகளே நல்லபடியாகத் தீர்க்குமென்றும், அரசாங்கத்துடன் கூட்டுச் சேர்ந்தால், இப்பிரச்சினையைச் சுமுகமாகத் தீர்க்கலாமென்றும், சில சோஷலிஸ்ட் தலைவர்கள் பகிரங்கமாகக் கூட்டங்களில் கூறிவந்தனர். அவர்கள் இந்தப் புதிய நிலைபற்றி என்ன கருதுகின்றார்களோ!

எப்படியும் எது நடந்தாலும் நல்லதுக்குத்தான். தர்மமே முடிவாக வெல்லுமென்பது பொய்க்காதல்லவா?

* * *

கூட்டு அரசாங்கம் ஏற்படுமா ஏற்படாதா? பத்திரிகைகளில் வெளியாகும் பலபல செய்திகளையும் பார்க்கும்போது இது ஏற்படுவது குதிரைக்கொம்பென்று தோன்றுகின்றது.

ஆனாலும் சில அரசியல் வட்டாரங்கள் இந்த நம்பிக்கையை இழக்கவில்லை. கூட்டு அரசாங்கம் எப்படியும் ஏற்படத்தான் போகிறதென்றும், அதில் பிலிப் இருக்கமாட்டாரென்றும் ஓர் அரசியல் அவதானி கூறுகின்றார். அப்படியாயின் இடதுசாரிக் கூட்டு முன்னணி முறிந்துவிடுமா? தாம் மந்திரியாக முடியாவிட்டால், கூட்டு அரசாங்கம் ஏற்பட பிலிப் சம்மதிப்பாரா? அப்படிச் சம்மதித்தாலும் அத்துடன் ஒத்துழைப்பாரா? இதுபோன்ற பல கேள்விகள் இன்று அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகின்றன.

இங்கு அரசியல்நிலை அதிக ருசியாகி இருக்கிறது. எந்தச் சமயத்திலும் எதுவும் நடக்கலாம். என்னதான் நடக்கிறதோ பொறுத்திருந்து பார்ப்போம்.

* * *

சென்னையின் கவர்னரான மைசூர் மகாராஜா மாதச் சம்பளம் வாங்கப்போவதில்லை என்று அறிவித்துள்ளதைக் கேட்டதும் மிக மகிழ்ச்சியாக இருந்தது. இதனால் அவரது மதிப்பு முன்னிலும் கூடிவிட்டது. ஏற்கனவே இருந்த சென்னை கவர்னர்களுக்கு கறுப்புக்கொடிகாட்டி, எதிர்க்கட்சிகள் சில எதிர்க்கவும் செய்தன. ஆனால் சம்பளம் வாங்காத புதிய கவர்னர் விஷயத்தில் அப்படி எதிர்க்க யாரும் துணியமாட்டார்கள். இப்படிப்பட்ட மைசூர் மகாராஜா சென்னை கவர்னர் பதவியை ஏற்றதனால், சென்னை ராஜ்யத்துக்கே ஒரு பெருமையாகும்.

அதுமட்டுமல்ல மற்ற கவர்னர்களுக்கும்கூட அவர் மேலான முன்மாதிரி காட்டியுள்ளார். இதனால் கவர்னர் பதவியின் மதிப்பே உயர்வதாகவுள்ளது

இந்த முன்மாதிரியை நம் இலங்கையிலுள்ள கவர்னர் ஜெனரலும் பின்பற்றுவாரா? அப்படி பின்பற்றினால் எவ்வளவு நன்றாக இருக்கும்!

* * *

மெய்யானை பொய்யரோடு விரவாதானை வெளவிடையைத் தன் நிழலை வெந் தீயேந்துங், கையானைக் காமனுடல் வேவக் காய்ந்த கண்ணானைக் கண் மூன்றுடையான் தன்னைப்,

(4-ம் கலம்பார்க்க)

(5-ம் கலத் தொடர்ச்சி)

பையாடரவமதியுடனே வைத்த சடையானைப் பாய்புலித்தோலுடையான் தன்னை ஐயானை ஆவடுதண்டுறையுள் மேய அரனடியே அடி நாயேன் அடைந்துய்ந்தேனே.

—திருநாவுக்கரசர்.

# பர்மாவிலுள்ள இந்தியர் நிலைமை

## இந்திய அரசாங்கம் கவலை

புதுடில்லி, மே 7

பர்மாவிலுள்ள இந்தியர் நிலைகுறித்து இந்திய அரசாங்கத்தின் கவலையை பர்மிய அரசாங்கத்துக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது என்று இந்தியவெளி விவகார இலாகா அதிகாரியொருவர் தெரிவித்தார்.

பர்மாவிலிருந்து இந்தியர் வெளியேறி வருவதும் அங்கு அவர்களுக்குள்ள கஷ்டங்கள் பற்றியும் இதுசம்பந்தமாக இந்திய அரசாங்கம் கவலையடைந்துள்ளதாகவும் ரங்கூனிலுள்ள இந்திய அரசாங்கப் பிரதிநிதி பர்மிய அரசாங்க அதிகாரிகளிடம் கூறியிருக்கிறார். இதுதவிர புதுடில்லியிலுள்ள பர்மிய தூதருடனும் இந்திய அதிகாரிகள் ஆலோசனை நடத்தியுள்ளனர்.

பர்மாவிலுள்ள இந்தியர் நிலைபற்றி பர்மா அரசாங்கம் பரிசீலனை செய்யுமென எதிர்பார்க்கப்படுவதாய் வெளிவிவகார அதிகாரி தெரிவித்தார்,

திருமதி லக்ஷ்மிமேனன் ரங்கூன் செல்வார என வெளிவந்த செய்தியையும் அந்த அதிகாரி மறுத்தார்.

கிழக்கு பாகிஸ்தானிலிருந்து

# நாற்பதாயிரம் அகதிகள் இந்தியாவர விரும்புகின்றனர்

பம்பாய், மே 7

கடந்த நான்குமாத காலமாகச் சுமார் 13,000 பௌத்த அகதிகள் கிழக்குப் பாகிஸ்தானிலிருந்து லூஸ்காய்மலை வழியாக அஸாமிற்கு வந்துள்ளார்களென அஸாம் அரசாங்க அதிகாரியொருவர் அறிவித்துள்ளார்.

தினமும் இருநூற்றுக்கு அதிகமான அகதிகள் இந்தியாவிற்கு வருகிறார்களென்றும் இவர்களில் அதிகமானோர் கிழக்குப் பாகிஸ்தானிலுள்ள சிற்ருகொங் மலைத்தொடர்ப் பகுதியிலிருந்தே வருகிறார்களென்றும் அந்த அதிகாரி தெரிவித்துள்ளார்.

இந்தியாவிற்கு வருவதற்கு மேலும் 40,000 அகதிகள் விருப்பமுள்ளவர்களாக எல்லையில் காத்துக்கொண்டு சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் கொண்டிருப்பதாகவும் அப்பகுதிக்கு விஜயம்செய்த ஒருவர் தெரிவித்தார்.

நூற்றுக்கணக்கான மைல்களுக்குப் பாகிஸ்தான் இராணுவத்தினர் அகதிகளை கட்டாயப்படுத்தி நடத்திச் சென்றனரென்றும் ஓய்வில்லாமல் மாதக்கணக்காக மூங்கிலினல் செய்யப்பட்ட கட்டுமரத்தை ஓட்டிவந்தனரென்றும் அப்பகுதிகளுக்கு விஜயம் செய்தவர் மேலும் கூறினர்.

மலேசிய - இந்தோனேஷியா

# பிரச்னையால் தெ. கி. ஆசியாவில் முன்னேற்றம் தடைப்பட்டுள்ளது

## பத்திரிகை நிருபர் மத்தியில் திரு. பட்லர்

மணிலா, மே 7

மலேசியாவிற்கு எதிரான இந்தோனேஷிய நடவடிக்கையினல் தென்கிழக்கு ஆசியாவில் சமாதானமும் முன்னேற்றமும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதென்று பிரிட்டிஷ் வெளிநாட்டு காரியதரிசி திரு. ஆர். ஏ. பட்லர் பத்திரிகை நிருபர்கள்மகாநாட்டில் பேசும்போது கூறினர்.

இந்தோனேஷியாவிற்கும் மலேசியாவிற்கும் ஏற்பட்டுள்ள பிரச்னையை ஆசிய நாடுகளே ஒன்றுசேர்ந்து தீர்த்துவைக்க வேண்டும் என தான் நம்புவதாகவும் அவர் தெரிவித்தார்.

பிலிப்பைன் அரசாங்கத்தின் அழைப்பிற்கிணங்கி திரு. பட்லர், இரு தினங்கள் சுற்றுப்பிரயாணம் செய்வதற்காக நேற்று முன்தினம் இங் வந்துள்ளார்.

இந்தோனேஷியா - மலேசியா பிரச்னைபற்றி அவர் தொடர்ந்துகூறியதாவது:மலேசியா இந்தோனேஷியா பிரச்னையில் ஒரு சமாதான முடிவு ஏற்படவேண்டுமென்று பிரிட்டன் விரும்புகிறது. இப்படியான ஒரு சமாதான தீர்வுக்காக ஒத்துழைக்கும்படி தென்கிழக்கு ஆசியாவில் உள்ள தலைவர்கள் எங்களுக்கு ஊக்கமளிக்கிறார்கள்.

## காஷ்மீர்: பாக். மந்திரி நம்பிக்கை

கராச்சி, மே 7

காஷ்மீர் பிரச்னைக்கு விரைவில் தீர்வு கிடைக்கக்கூடிய அறிகுறிகள் தென்படுகின்றன என்று பாகிஸ்தானின் காஷ்மீர் விவகாரமந்திரி திரு. ஹபிபுல்லாகான் தெரிவித்துள்ளார்.

இறுதியில் பாகிஸ்தானுக்கு சாதகமாகவே காஷ்மீர் பிரச்னை தீருமென்றும் அவர் சொன்னர்.

## பாகிஸ்தானுக்கு ஆதரவாம்

கராச்சி, மே 7

காஷ்மீர் சம்பந்தமாகபாகிஸ்தானுக்கு ஆதரவு தேடுமுகமாக இலங்கை உட்பட 17 நாடுகளில் சுற்றுப்பிரயாணம் செய்த உத்தியோகப்பற்றற்ற தூதுக் குழு நேற்று கராச்சி திரும்பியது.

தாம் சென்ற நாடுகளில் காஷ்மீர் பிரச்னையில் பாகிஸ்தானின் கொள்கைக்கு அந்தந்த நாடுகளின் அரசாங்கமும் மக்களும் ஆதரவும் அனுதாபமும் தெரிவித்ததாக குழுவின் தலைவர் ஷகாபுதீன் தெரிவித்தார்.

## குருஷ்சேவ் எகிப்து விஜயம்

மாஸ்கோ, மே. 7

சோவியத் பிரதமர் குருஷ்சேவ் ஐக்கிய அரபுக் குடியரசுக்குச் சென்றுகொண்டிருக்கிறார். கப்பலில் பிரயாணம் செய்துகொண்டிருக்கும் திரு. குருஷ்சேவ் சனிக்கிழமை அலெக்ஸாந்திரா போய்ச்சேர்வார்.

சோவியத் யூனியனின் உதவியுடன் எகிப்தில் கட்டப்படும் அஸ்வான் அணையின் பூர்த்தி விழா வைபவத்தில் கலந்து கொள்வார். அதன்பின்னர் ஐக்கிய அரபுக் குடியரசு அதிபர் நாஸருடன் பேச்சுவார்த்தை நடத்துவார்.

திரு. குருஷ்சேவின் முதலாவது ஆபிரிக்கப் பிரயாணம் இதுதான்.

புதுடில்லி, மே 7

பண்டித மோதிலால் நேரு ஞாபகார்த்த ஹோமியோபதி ஆஸ்பத்திரியை மத்திய மந்திரி திரு. லால்பகதூர் சாஸ்திரி நேற்று ஆரம்பித்துவைத்தார்.

## அல்ஜீரியாவுக்கு சோவியத் உதவி

மாஸ்கோ மே 7

அல்ஜீரியாவுக்கு மேலும் பொருளாதார உதவியளிப்பதாகச் சோவியத் யூனியன் உறுதியளித்துள்ளது. முன்னர் ஒப்புக்கொண்ட நாலரைக்கோடி பவுண் உதவியைவிட மேலும் ஒரு உருக்கு ஆலையமைக்கவும், தொழில்நுட்பப் பாடசாலைகள் அமைக்கவும் சோவியத் யூனியன் முன்வந்துள்ளது.

## அபிவிருத்திக்கு புதிய உலக நிதி

ஜெனிவா, மே 7

அபிவிருத்தியடையும் நாடுகளுக்கெனபுதிய உலக நிதியொன்று ஆரம்பிக்கப்படவேண்டுமென்று ஜெனிவாவில் நடைபெறும் உலக வர்த்தக மகாநாட்டில் பிரிட்டன் யோசனை தெரிவித்துள்ளது. இந்த யோசனையை சுவீடன் ஆதரித்தது.

சர்வதேசநாணய சபையிடமிருந்து அபிவிருத்திக்கு நிதி பெற முடியாத நாடுகள்,தங்கள் அபிவிருத்திக்கு நிதி பெறுவதற்கு வசதியாக புதிய விசேஷ நிதி ஆரம்பிக்கப்படவேண்டுமென்றும் இந்த நிதி நீண்டகாலத் திட்டத்தில் கடன் வழங்கலாமென்றும் பிரிட்டிஷ் வர்த்தக மந்திரி திரு. எட்வர்ட் ஹீத் மகாநாட்டில் தெரிவித்தார். சர்வதேச அபிவிருத்தி சபையினல் ஆரம்பிக்கப்படும் இந்த விசேஷ நிதி உலக வங்கியுடன் இணைந்திருக்கவேண்டும் என்றும பிரிட்டன் தெரிவித்தது.

## மக்னமாரா சைகோன் விஜயம்

வாஷிங்டன், மே 7

தென் வியட்நாமில் அரசியல், ராணுவ நிலைமைபற்றி நேரில் அறிந்து கொள்வதற்காக அமெரிக்க பாதுகாப்பு மந்திரி மகனமாரா அடுத்த வாரம் மீண்டும் சைகோன் செல்வார். மக்னமாராவுடன் அமெரிக்க சேனாதிபதி ஜெனரல் வீலரும் உதவிப் பாதுகாப்பு மந்திரியும் செல்வார்கள்.

## விடுதலைப் போருக்கு சீனவின் உதவி

பீக்கிங், மே 7

தென்னபிரிக்காவிற்கு எதிராக சுதந்திரம்பெற்ற ஆபிரிக்க நாடுகள் போர் தொடுக்காவிடில், இன்னும் சுதந்திரம் பெருமல், காலனி ஆட்சியில் நீடித்திருக்கும் நாடுகளுக்கு விடுதலை கிடைக்காது என்று கென்யா உள்நாட்டு அமைச்சர் திரு. ஒகின்கா ஓடின்கா கூறினர்.

அப்படியான ஒரு போராட்டத்திற்கு அவர் சீனவின் உதவியையும் கோரியுள்ளார்.

கென்யா அரசாங்க தூது கோஷ்டியொன்றிற்கு தலைமை தாங்கி சென்ற திரு. ஓடின்கா, இங்கு நடைபெற்ற பாராட்டுக் கூட்டமொன்றில் பேசும்போது மேற்கண்டவாறு கூறினர்.

## நாயனர் குருபூசை

யாழ்ப்பாணம், வெள்ளி

சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலயக் கூட்டுப் பிரார்த்தனைச் சபையாரால் திருநாவுக்கரசு நாயனர் குருபூசை நேற்றுமுன்தினம் நடாத்தப்பெற்றது. நாவுக்கரசரின் நூற்றெண்டினைப் பின்பற்றிப் பல தொண்டர்களால் ஆலயமும்-வீதியும் புனிதமாக்கப் பட்டது.

மாலையில் விசேட வழிபாடு நடைபெற்றது. அதன் பின் பஜனையும்-திருநாவுக்கரசுநாயனர் சரித்திரமும் வாசிக்கப் பெற்றன. பின் சைவசமய குரவர் நால்வருக்கும் விசேட பூசை செய்யப்பெற்று, வீதி வலம் நடைபெற்றது. அதன் பின் அடியார்களுக்குப் பிரசாதம் வழங்கப்பெற்றது.

# மலேஷியா தகராறு ஐ. நா. செல்லும்

## மத்தியஸ்தம் செய்வதற்கு மக்கப்பகல் உறுதி

கோலாலம்பூர், மே 7

மலேசியாவை சிதைக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் இந்தோனேஷியா நடந்துகொள்ளும் முறை பற்றியும் போர்னியோ எல்லையில் இந்தோனேஷியத் துருப்புக்கள் ஆக்கிரமிப்புச் செயல்களில் ஈடுபடுவது பற்றியும் ஐ. நா. பாதுகாப்புச் சபைக்கு மலேசியா புகார் செய்யவிருப்பதாக அறியப்படுகிறது.

இந்தோனேஷியாவின் நடவடிக்கைகள் குறித்து ஐ. நா. வுக்கு மலேஷியப் பிரதமர் புகார் செய்யக்கூடுமென்று அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

மலேஷியா - இந்தோனேஷியா தகராறை சுமுகமாகத் தீர்ப்பதற்கு தாம் மத்தியஸ்தம் செய்யவிருப்பதாக பிலிப்பைன்ஸ் ஜனதிபதி திரு. மக்கபகல் தெரிவித்துள்ளார். பிரிட்டிஷ் வெளி விவகார மந்திரி திரு. ஆர். ஏ. பட்லர் பிலிப்பைன்ஸுக்கு விஜயம் செய்திருந்தபோது மத்தியஸ்த உறுதிமொழியை மக்கபகல் பட்லருக்கு அளித்தார்.

# பலகட்சி எம். பி. க்களுடன் ஷேக் அப்துல்லா ஆலோசனை

புதுடில்லி, மே 7

காஷ்மீர் முன்னள் பிரதமர் ஷேக் அப்துல்லா நேற்று பல்வேறு அரசியல் கட்சிகளைச் சேர்ந்த எம். பி.க்களைச் சந்தித்துப் பேசினர். பிரஜா சோஷலிஸ்ட் கட்சி, சோஷலிஸ்ட் கட்சி, சுதந்திராக் கட்சி, திராவிட முனேற்றக் கழகம் ஆகியவைகளைச் சேர்ந்த எம். பி.க்களை அவர் சந்தித்துப் பேசினர்.

பின்னர் நிருபர்களிடம் பேசிய ஷேக் அப்துல்லா காஷ்மீர் விஷயமாக பாகிஸ்தானை அசட்டை செய்துவிட முடியாதென்றும் காஷ்மீர் பிரச்னையில் பாகிஸ்தானுக்கும் பங்கு உள்ளதென்றும் கூறினர்.

காஷ்மீர் தனி நாடாக இருக்கவேண்டுமென்ற யோசனை தமக்கு இல்லையென்றும் காஷ்மீர் மககளே காஷ்மீரின் எதிர்காலம்பற்றித் தீர்மானிகக வேண்டுமென்றும் அவர் கூறினர்.

பாகிஸ்தானுக்கு வருமாறு அதிபர் அயூப்கான் விடுத்த அழைப்புக்குத் தாம் பதிலனுப்பவிருப்பதாகவும் ஷேக் அப்துல்லா கூறினர்.

பாதுகாப்புச் சபைக்குச் செல்வீர்களா என்று ஒரு நிருபர் கேட்டதற்கு ஆது பாதுகாப்புச் சபையைப் பொறுத்த விஷயம் என்றார்,

## ஜம்முவில் குண்டுவீச்சு

ஸ்ரீநகர், மே 7

ஜம்முவில் சதிரி யாசத்கரன் சிங்கின் மாளிகைக்கு முன் சென்ற திங்கட்கிழமை நள்ளிரவில் பிளாஸ்டிக் குண்டு ஒன்று வெடித்தது.

## கூட்டரசாங்கம் நிச்சயமானது

### — விக்கிரமசிங்கா

அக்குரஸ்ஸ, வியாழன்

சிறிலங்கா சுதந்திரக்கட்சியும் ஐக்கிய இடதுசாரி முன்னணியும் கூட்டுச் சேருவது நிச்சயம் எனவும் சோஷலிஸ அரசாங்கம் ஒன்று மிக விரைவில் உருவாக்கப்படும் எனவும் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. எஸ். ஏ. விக்கிரமசிங்கா அத்துரலியா என்னுமிடத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசுகையில் தெரிவித்தார்.

தனது இறுதிக்காலத்தில் இருந்துகொண்டிருக்கும் தற்போதைய அரசாங்கத்துக்கு மக்கள் நலன் கருதி ஒத்துழைப்புக் கொடுப்பதென ஐக்கியஇடதுசாரி முன்னணி முடிவு செய்துவிட்டதெனவும் புதிய சோஷலிஸ அரசாங்கம் ஒன்று உருவாகுவதை எவராலும் தடை செய்ய முடியாதெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## சதிவழக்குவிசாரணை

கொழும்பு, வியாழன்

புரட்சிச் சதிவழக்கு எதிரிகளில் மேலும் இருவர் சுகவீனமுற்றதால் நேற்று முன்தினம் ஆரம்பமான புரட்சி விசாரணை நீதிமன்றம் சிறிதுநேர விசாரணையின்பின் ஒத்திவைக்கப்பட்டது. அன்றையதினம் விசாரணைக்குச் சமுகமளிக்காத திரு. வி. வி. தசநாயக்காவும் திரு. ஜி எஸ். ஜாக்ஸனும் தாமில்லாது விசாரணை நடத்தப்படுவதை விரும்பவில்லை என்று நீதியரசர்களுக்குத் தெரிவித்திருந்தமையால் அவர்களது விவகாரஞ் சம்பந்தப்பட்ட சாட்சிகளை விடுத்து உதவிப்பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் கலாட்டை சாட்சியம் அளிக்க அழைப்பதாக அட்டர்ணிஜெனரல் குறிப்பிட்டார். எதிர்தரப்பு சிரேஷ்ட வழக்கறிஞர்களில் ஒருவரான திரு. கன்னங்கரா திரு. கலாட்டை சாட்சியமளிக்க அழைப்பதுபற்றி தமக்குப் போதிய முன்னறிவித்தல் கொடுக்காமையால்தான் குறுக்குவிசாரணை செய்யத் தயாராகவில்லை என்றார். எனவே கோர்ட்டை ஒத்திவைப்பதென நீதியரசர் சன்சோனி தீர்மானித்தார்.

## விளையாட்டுக்கழக சுற்றுப்பிரயாணம்

தலவாக்கொல்லை, வியா.

சுற்றுப்பிரயாணம் ஒன்றை மேற்கொண்டிருக்கும் யாழ்ப்பாணம் ஒக்கேஷனல் விளையாட்டுக்கழகத்தினர் இங்கு டயிலை ஆராச்சிக்கழக விளையாட்டு வீரருடன் கிரிக்கெட்டும், உதைபந்தாட்டமும் ஆடினர்.

உதைபந்தாட்டம் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது. இரு தரப்பினரும் கோலெதுவும் போடவில்லை. காலநிலை சீராக இல்லாமையால் டென்னிஸ், கூடைப்பந்து முதலிய ஆட்டங்கள் ஆடப்படவில்லை. எனினும் டேபிள் டென்னிஸ் ஆட்டம் நடைபெற்றது.

ரத்தெல்லாவில் டிப்புல விளையாட்டுக்கழகத்தின் அகதிகளாக இருந்தபோது ஹவலொக் விளையாட்டுக்கழகமும் டிம்புல விளையாட்டுக்கழகமும் ஆடிய சிநேகபூர்வமான உதைபந்தாட்ட விளையாட்டைக் யாழ்ப்பாணம் ஒக்கேஷனல் கழகத்தினர் கண்டுகளித்தனர்.

இந்தச் சுற்றுப்பிரயாணம் பிரபலபுத்தகவிற்பனையாளரின் யாழ்ப்பாணக் கிளையின் மனேஜர் திரு. கருணைராஜனும் யாழ்ப்பாணக்கல்லூரி விரிவுரையாளர்கள் டாக்டர் செல்லையா, நிச்சாட்ஸ் ஆகியோராலும் ஒழுங்குசெய்யப்பட்டது.

# சிங்களச்சட்டத்தை பிரஸ்தாபிக்க அவசியமில்லை

## மொழிவழக்கு அப்பீல் மனுவில் அட்டோர்ணி ஜெனரல்

கொழும்பு, வியாழன்

மொழி வழக்கில் கீழ்க் கோர்ட்டில் அளிக்கப்பட்ட தீர்ப்பை ஆட்சேபித்து நேற்றுக் காலை அட்டோர்ணி ஜெனரல் அப்பீல் தாக்கல் செய்துள்ளார்.

கேகாலைக் கச்சேரியைச் சேர்ந்த திரு. செல்லையா கோடீஸ்வரன், 4-12-61 திகதியிடப்பட்ட திறைசேரி சுற்றறிக்கை சட்டவிரோதமானதும் அநீதியானதும் எனக் கூறி அந்த சுற்றறிக்கையைக் கொண்டு தனது சம்பள உயர்வை நிறுத்தி வைக்க முடியாது எனவும் அட்டோர்ணி ஜெனரலுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்திருந்தார்.

திரு. செல்லையா கோடீஸ்வரனின் சம்பள உயர்வை நிறுத்தி வைத்ததில் கேகாலை கச்சேரி அரசாங்க அதிபர் தவறு செய்துவிட்டார் எனவும் திரு. கோடீஸ்வரனுக்கும் அரசாங்கத்துக்குமிடையே சேவை ஒப்பந்தம் ஒன்று இருக்கின்றது என்றும் நீதிபதி திரு. ஓ. எல். டி. கிறெஸ்டர் தமது தீர்ப்பில் கூறியிருந்தார்.

கீழ்க்கோர்ட்டில் அளிக்கப்பட்ட தீர்ப்பு சட்டத்திற்கு விரோதமானதெனவும், கோர்ட்டில் அளிக்கப்பட்ட சாட்சியங்களுக்கு முரணானதெனவும் அட்டோர்ணி ஜெனரல் தமது அப்பீல் மனுவில் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்துக்கும் அரசாங்க ஊழியர்களுக்குமிடையே சேவை ஒப்பந்தம் எதுவுமில்லை என்றும் அட்டோர்ணி ஜெனரல் தமது அப்பீலில் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்க ஊழியரின் சேவை ஒப்பந்தத்தை மாற்றியமைப்பது அரசாங்க சேவைக் கமிஷனுக்கு உரியதே என்றும் அரசாங்கசேவையில் தலையிடுவதற்கு இலங்கை மந்திரிகளுக்கு அதிகாரம் இல்லை என்றும் கூறி நீதிபதி கிறெஸ்டர் தன்னையே பிழையாக வழி நடத்திவிட்டார் என்றும் அட்டோர்ணி ஜெனரல் குறிப்பிட்டுள்ளார்.

குறிப்பிட்ட வழக்கு சம்பந்தமான தீர்ப்பளிப்பதற்கு உத்தியோக மொழிச் சட்டம் செல்லுபடியாகுமா செல்லுபடியாகாதா என்பது பற்றி ஆராய்ந்தது தேவையற்றதும் ஒழுங்கற்றதுமான ஒன்று எனவும அட்டோர்ணி ஜெனரல் தமது அப்பீல் மனுவில் தெரிவித்துள்ளார். உத்தியோக மொழிச்சட்டம் அநீதமானது எனக் கூறி பிழையாக நடந்து கொண்டார் எனவும் எந்த சந்தர்ப்பத்திலும் உத்தியோக மொழிச்சட்டம் அநீதமானது அல்லவென்றும் அட்டோர்ணி ஜெனரல் குறிப்பிட்டுள்ளார்.

## எம். ஈ. பி. யிலிருந்து ரூபேட் விலக்கப்பட்டார்

கொழும்பு, வியாழன்

மக்கள் ஐக்கிய முன்னணியின் அங்கத்துவ பதவியிலிருந்து திரு. ரூபேர்ட் குணவர்த்தன விலக்கப்பட்டுள்ளார்.

திரு. ரூபேர்ட் குணவர்த்தனவைக் கட்சியிலிருந்து விலக்குவதென அண்மையில் முடிவு செய்யப்பட்டதாக அவரின் சகோதரரான கட்சியின் தலைவர் திரு. பிலிப் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.


REGAL — JAFFNA
NOW SHOWING
Daily 3Shows. Sats.&Suns. Four
Rock Hudson — Doris Day
in
LOVER come BACK
(Eastman Colour)



சினிமாஸ் திரைகளில்

அடுத்த திரை விருந்து

எஸ். எஸ். ராஜேந்திரன் — விஜயகுமாரி

மற்றும் பலர் நடித்த

நானும் ஒரு பெண்

தென்னாட்டில் 125 நாட்களுக்கு மேல் ஓடிய உன்னத தமிழ் திரை விருந்து

வெற்றிகரமான 6வது வாரம்!

கிங்ஸ்லி பிளாஸா வெலிங்டன்
(கொழும்பு) (வெள்ளவத்தை) (யாழ்ப்பாணம்)



எம். ஜி. ராமசந்திரன்—பி. சரோஜாதேவி

நடித்த

பெரிய இடத்துப் பெண்


ஆசிரியருக்குக் கடிதம்

## கல்லுண்டாய் உப்பளம்

"கல்லுண்டாயில் உப்பளம் அமைக்க ஏற்பாடு" என்ற தலைப்பின்கீழ் வெளிவந்த செய்தி தவறானது. உப்பளம் கல்லுண்டாயில் அமைப்பதை ஆட்சேபித்து உணவு விவசாய மந்திரிக்கும், பிரதமமந்திரிக்கும், நிதிமந்திரிக்கும், தொழில்மந்திரிக்கும், அரசாங்க அதிபருக்கும் பெட்டிசங்கள் அனுப்பியதைத் தொடர்ந்தே நவாலிமக்களில் சிலர் தமது கஷ்டங்களை தெரிவிக்குமுகமாக திரு. வி. தர்மலிங்கத்தையும் இன்னும் சில பிரமுகர்களையும் கூட்டி கூட்டம் அமைத்தனர். இக்கூட்டத்தில் நானும் சமூகம் அளித்திருந்தேன். இதில் உப்பளம் சார்பாக திரு. என். சிவனேசன் தமது கருத்துக்களைத் தெரிவித்திருந்தார். இவற்றை ஆட்சேபித்து நான் நவாலி வாசியென்ற முறையிலும் விவசாயி என்ற முறையிலும் சில கருத்துக்களைத் தெரிவித்தேன்.

பல்லாண்டாக திரு. பாலசிங்கத்தின் யாழ் குடாநாட்டின் நன்னீர் திட்டப்படி நம் நாட்டு விவசாய விருத்திக்காக ஆயிரக்கணக்கான ரூபாய்செலவில் செய்யப்பட்ட வேலைகள் நாசமாக்கப்படுகிறதென்றும் இதனால் மக்கள் பாதிக்கப்படலாம் என்றும் உடனடியாக ஆனைக்கோட்டை, அராலி, நவாலி மக்களின் விவசாயம் பெரிதும் பாதிக்கப்படலாமென்பதுடன் ஆடு மாடுகள் வளர்த்து தமது வாழ்க்கையை நடாத்தும் மக்கள் பாதிக்கப்படலாமென்றும் கூறினேன். இன்று உப்பளம் உருவாக்க நடாத்தப்படும் ஏற்பாடுகள் தனிநபர்கள் காணிகளிலும் நடைபெறுகிறதென்றும் இது அடாத்தான செயல் என்றும் பாதிக்கப்படவிருப்போருக்கு நஷ்டஈடு கொடுபட வேண்டுமென்ற பிரச்சினை சுலபமானதல்ல என்றும் ஒருகமக்காரன் தனக்கும் தனது சந்ததிக்கும் காணியே வயலே தஞ்சமென்றும் சீவிக்கையில் காணியை மாத்திரம் விலை கொடுத்து வாங்கினால் போதாது. அவர்களுக்கு வருடாவருடமாக விளைச்சல் பலிதமாக பணம் கொடுத்தே வரவேண்டும் என்றும் இது ஒரு சில்லரைமாத்திரம் பாதிக்கவில்லை. உடனடியாக எமது கிராமங்களையும் காலம் செல்லச்செல்ல தமிழ் மக்களையும் பாதிக்கும் என்றும் குறிப்பிட்டேன்.

இவை இவ்வாறிருக்க தனிநபர் வீட்டில் ஆலோசனைக்காகக் கூட்டப்பட்ட இக்கூட்டத்தைப்பற்றிய ஒரு சார்பான செய்தியே வெளிவந்திருக்கிறது. ஈற்றில் ஆனைக்கோட்டை நவாலி கிராமத்தில் எதிர்ப்பு நாளுக்கு நாள் வலுவடைந்துவருகிறது.

மு. ஜெயரத்தினம்.
நவாலி.

## லட்சம் தாலாட்டுப்பாடல்கள்

நம் தமிழ்நாட்டில் வாய்மொழி இலக்கியமாக வழங்கி வரும் தாலாட்டுப்பாடல்களைச் சேகரிக்கும் தமிழ்ப் பணியில் நான் ஈடுபட்டுளளேன். கோடிக்கணக்கான தாலாட்டுப் பாடல்கள் பரம்பரை பரம்பரையாகத் தாய்மார்களால் பாடப்பட்டு வருவதும் அவை இன்று கொஞ்சம் கொஞ்சமாக மறைந்து வருவதும் நாம் அனைவரும் அறிந்ததே. அப்படிப் பாடப்பட்டுவரும் தாலாட்டுப் பாடல்களில் ஒரு இலட்சம் பாடல்கள் வரை தொகுத்துத் தமிழ்த்தாயின் திருவடிகளில் படைக்க நினைக்கின்றேன். இத்தொண்டு இனிது நிறைவேற உங்கள் இல்லத்தில் பாடப்படும் பாடல்களையும் முடிந்தால் உங்களுக்குத் தெரிந்தவர் இல்லங்களில் பாடப்படும் பாடல்களையும இயன்றமட்டும் எனக்கு எழுதி அனுப்பப் பணிவன்புடன் வேண்டுகின்றேன்.

ஆறு. அழகப்பன்,
தமிழ் விரிவுரையாளர் (கீழைத்துறை)
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

# பல்கலைக்கழகப்புகுமுகவகுப்புக்கு வர்த்தக பாடங்கள்

நீர்வேலி, வியாழன்

அகில இலங்கை வர்த்தகக் கலைமன்றத்தின் பெரு முயற்சியினால் பல்கலைக்கழகப் புகுமுக வகுப்புக்கு வர்த்தக கணிதம், கணக்குப் பதிவியல் முதலிய பாடங்கள் சேர்த்துக் கொள்ளப் படலாமெனத் தெரியவருகிறது. சர்வகலாசாலைப் பதிவாளர் வர்த்தகக் கலை மன்றத்துக்கு அனுப்பியுள்ள கடிதமொன்றில் கலைப்பிரிவின் அடுத்த கூட்டத்தில் இதுபற்றி ஆராயவிருப்பதாக அறிவித்துள்ளார்.

வர்த்தகக் கலை மன்றத்தின் செயலாளர் மா. புவனேந்திரன் பல்கலைக் கழகப் பேராசிரியர்களைச் சந்தித்துப் புகுமுக வகுப்பிலேயே வர்த்தகப் பாடங்கள் மாணவர்க்குப் பயிற்றப் படவேண்டிய தன் அவசியத்தை வலியுறுத்தினர். புகுமுக வகுப்புக்கு வர்த்தக பாடங்கள் அனுமதிக்கப் படாமையால் வர்த்தக பாடங்களைப் பயின்று க. பொ. த. சாதாரணப் பரீட்சைக்குத் தோற்றியவர்கள் பல்கலைக்கழக வர்த்தகக் கலைப் பகுதியில் சேர்ந்து பயில முடியாதிருக்கும் அதே நேரத்தில் வர்த்தகக் கல்வியில் அடிப்படை அறிவின்றி பல்கலைக்கழகம் புகுந்த ஏனைய மாணவர் வர்த்தகக் கல்வி பயிலும் நிலை ஏற்பட்டுள்ளது என அவர் சுட்டிக் காட்டிய காரணத்தை நியாயமானது என பல்கலைக்கழக வட்டாரத்தினர் பலரும் கருதுகின்றனர்.

### வர்த்தக தமிழ் ஆசிரியர் நியமனம்

கடந்த பல வருடங்களாக தமிழ்ப் பகுதிகளில் வர்த்தக ஆசிரியர்களை நியமிக்காததால் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களும் அகில இலங்கை வர்த்தக கலை மன்றமும் தொடர்ந்து கிளர்ச்சி செய்ததன் பயனாக 4-5-64 தொடக்கம் 12 கல்லூரிகளுக்கு ஆசிரியர்கள் நியமிக்கப் பட்டுள்ளனர். நியமனம் பெற்ற ஆசிரியர்களும் பாடசாலைகளும் பின்வருமாறு:

திரு. பாலசிங்கம்– யாழ்ப்பாண மத்திய கல்லூரி, செல்வி இராசேஸ்வரி– கொக்குவில் இந்துக் கல்லூரி, செல்வி ஜெம்மா அருளானந்தம் – கடேஸ்வராக் கல்லூரி, செல்வி பேரின்பநாயகி நெல்லியடி மத்திய கல்லூரி, செல்வி கமலாதேவி -உடுப்பிட்டிஅ மி. பெண்கள் கல்லூரி, செல்வி உமையம்மை - மட்டுவில் மகா வித்தியாலயம்-செல்வி பரிமளம் - எருக்கலம்பிட்டி மகா வித்தியாலயம், செல்விசோதிப் பிள்ளை - மூதூர் மகாவித்தியாலயம், செல்வி இலட்சுமி- வந்தாறுமூலை மகாவித்தியாலயம், செல்வி செல்லையா–காத்தான்குடி மகாவித்தியாலயம், திரு. தங்கவேல்- பட்டிருப்பு மகா வித்தியாலயம், திரு. சண்முகம் -சாகிராக் கல்லூரி காலி.

## மட்டுநகர் வாவியில் மீண்டும் சல்வீனியா

மட்டக்களப்பு, வியாழன்

மட்டக்களப்பு வாவியில் மீண்டும் "சல்வீனியா" களைப் பூண்டு தீவிரமாகப் பரவிவருகிறது. சில தினங்களாகப் பெய்த கடும் மழையினால், குளங்களிலும் வயல்நிலங்களிலும் விளைந்திருந்த "சல்வினியா பூண்டு உப்புநீர் வாவியில் தீவிரமாகப் பரவி வருகிறது. இதனால் உள்ளூர் மீன்பிடித் தொழிலாளர்கள் பெருமளவுக்குப் பாதிக்கப் பட்டுள்ளனர்.

## 'சர்வாதிகாரத்திற்கே வழிவகுக்கும்'

இரத்தினபுரி, வியாழன்

கூட்டு அரசாங்கம் ஏற்படாவிடில் வலதுசாரி கட்சியிலுள்ள பிற்போக்குவாதிகள் மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றுவதோடு அந்த ஆட்சி சர்வாதிகாரத்திற்கே வழிவகுக்கும் என்று அகலவத்தை எம். பி. யும் சமசமாஜக் கட்சி பிரமுகருமான திரு. அனில்முனசிங்கா இங்கு நடைபெற்ற கூட்டத்தில் பேசும்போது கூறினர்.

அவர் தொடர்ந்து கூறியதாவது:–தற்பொழுது சுதந்திரக் கட்சிக்கும் ஐக்கிய இடதுசாரி முன்னணிக்கும் ஏற்பட்டுள்ள ஒற்றுமையை கண்டு யூ. என். பி.யிலுள்ள பெரும்புள்ளிகளுக்கு ஏக்கம் பிடித்துவிட்டது. கூட்டு அரசாங்கம் ஏற்பட்டால் அது தொழிலாளர்களுக்குத்தான் நன்மையாக இருக்கும். ஐக்கிய இடதுசாரிமுன்னணியின் திட்டங்களை செயல்படுத்தினால்தான் நாட்டை முன்னேற்றமுடியும்.

## கலை–விஞ்ஞானப் பொருட்காட்சி

மட்டக்களப்பு, புதன்

மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரியில் இம்மாதம் 15-ம், 16-ம் திகதிகளில் கலை-விஞ்ஞானப் பொருட்காட்சியொன்று நடைபெறவிருக்கின்றது. பிரஸ்தாப பொருட்காட்சியில் ஈழத்து எழுத்தாளர்களின் இலக்கியப் படைப்புகள் ஜப்பானிய அரசாங்க தூதுவராலயத்தின் ஆதரவில் செரி புஷ்பக்காட்சி, புஷ்பாலங்கார கலைப்போதனை, விஞ்ஞான விந்தைகள் விநோதக் காட்சிப் பொருட்கள் ஆகியன முக்கிய இடம்பெறுகின்றன எனஅறிவிக்கப்படுகிறது.


ரெமி பொரேட்டட் டல்க பவுடர்




ரெமி பவுடரைப் பாவித்திருக்கிறீர்களா? சிறந்த பவுடருக்கு இணையான இந்த உயர்ந்த பவுடர் - வெகு நியாயமான விலைகளில் கிடைக்கும். அதி உன்னத மூலப் பொருட்களினால் ஆக்கப்பட்ட ரெமி மிகு லளிதமாக வாசனையூட்டப் பட்டுள்ளது; உங்கள் வியாபாரிகளிடத்தில் 2 சைஸ் டின்களில் கிடைக்கும்.

ஆவ்ரா அன் கம்பனி,
19, செட்டியார் தெரு, கொழும்பு.
போன்: 7211, 7212

# "உடல்வளர்ச்சிக்கு விளையாட்டுக்கள் அவசியம்"

## புளியங்கூடல் விளையாட்டுப் போட்டியில் தீவுப்பகுதி எம். பி.

ஊர்காவற்றுறை, வியாழன்

காரந்தன கிராமசபையைச் சேர்ந்த புளியங்கூடல் மகா மாரி சனசமூக நிலையத்தின் விளையாட்டுப் போட்டி மே தினத்தன்று 'புதுவெளி' விளையாட்டு மைதானத்தில் தீவுப் பகுதி காரியாதிகாரி திரு. பி. எல். பற்றிக் தலைமையில் நடைபெற்றது. தீவுப்பகுதி எம். பி திரு. வ. நவரத்தினம் நிலையக்கொடியை ஏற்றிவைத்ததைத் தொடர்ந்து விளையாட்டுகள் ஆரம்பமாயின.

பச்சை, நீல இல்லங்களிடையே நடைபெற்ற பல்வேறு விளையாட்டுகளிலும் பாடசாலை மாணவ மாணவிகள் பங்குபற்றினர். கயிறு இழுத்தல் போட்டியில் நீல இலலம் வெற்றிபெற்றது. நீல இல்லம் 161 புள்ளிகளையும், பச்சை இல்லம் 130 புள்ளிகளையும் பெற்றன. வெற்றி பெற்றவர்களுக்கு உள்ளுராட்சி ஆணையாளர் திரு. துரைசுவாமி இராசேந்திரா சான்றிதழ்களையும், பரிசுகளையும் வழங்கினர். வெற்றிக் கிண்ணங்களும் வழங்கப்பட்டன.

திவுப்பகுதி எம். பி. திரு. வ. நவரத்தினம் உரைநிகழ்த்துகையில் கூறியதாவது:

அரசினரின் உதவியை நம்பின காலம் போய்விட்டது. இனி நமகையே நமக்குதவி. சுயமுயற்சியுடன் நாம் முன்னேறவேண்டும். முன்னேறுவதற்கு நம்மிடையே ஒற்றுமை அவசியமானது. புளியங்கூடல் மக்கள் பொதுவிஷயங்களில் ஒற்றுமையோடு உழைப்பது முன்மாதிரியாகும். மற்றைய கிராமங்களுக்கு ஒற்றுமையின் அவசியத்தை உணர்த்துகின்றது இது. அறிவு வளர்ச்சிக்கு வாசிகசாலையும், உடல் வளர்ச்சிக்கு விளையாட்டுகளும் மிக மிக அவசியமானவை. அவற்றை நாம் ஒற்றுமையுடன் நடத்துதல்வேண்டும். அப்போது தான் வெற்றி காணமுடியும்.

வழக்கறிஞர் திரு. என். சி. சிவஞானமும் பேசினர்.

விபரம் வருமாறு:

100 யார் ஓட்டம்: (அதிமேற் பிரிவு) கே. பாலகணபதி, கே. மகேஸ்வரன், எம். நடராசா.

220 யார் ஓட்டம்: எம். நடராசா. கே. மகேஸ்வரன், கே. மகாலிங்கம்.

குண்டெறிதல்: ஏ: பழனியப்பா, எஸ். செல்வராசா, ஏ. நடராசா.

நீளம் பாய்தல்— ந. முத்துக் கிருஸ்ணன், செ. இரத்தினம், கு கணேசலிங்கம்.

440 யார் ஓட்டம்— கே. பாலகணபதி, க. மகேஸ்வரன், கு. கணேசலிங்கம்.

220 யார் ஓட்டம்— (மேற்பிரிவு) எஸ். உலகநாதன், கே. மகேஸ்வரன், எஸ். மகேந்திரராசா.

நீளம்பாய்தல்— பொ. சாந்தலிங்கம், ச. இராசதுரை, க. தர்மராசா.

100 யார் ஓட்டம்— (மத்திய பிரிவு) எஸ். திருச்செல்வம், கே. இறைவன், எஸ். அமிர்தலிங்கம்.

100 யார் ஓட்டம்— (ம-பி-பெண்) ஆ. இராசம்மா, கே பேரின்பவதி, கே செல்வநாயகி.

220 யார் ஓடடம்— (மத்திய பிரிவு) எஸ். திருச்செல்வம், கே. இறைவன், இ. பரன்.

220 யார் ஓட்டம்— (ம-பி-பெண்) கே. பேரின்பவதி, ஆ. இராசம்பாள், க. செல்வநாயகி.

கயிறு அடித்தல்— கே. பேரின்பவதி, க. செல்வநாயகி, சோ. இந்திராவதி.

பலூன் உடைத்தல்— மூ. லீலாவதி, க. உமாதேவி, இ. செல்லமுத்து.

நீளம் பாய்தல்— (ம-பி-) செ. திருச்செல்வம், சோ. காசிலிங்கம், க. இறைவன்.

100 யார் ஓட்டம்— (கீழ்ப் பிரிவு) பி. சண்முகரத்தினம், என். ஜெயந்நாதன், கே. விக்கினேஸ்வரன்.

60 யார் ஓட்டம் — (கீ. பி பெண்) ஆ. ஞானம்பாள். ச. சரஸ்வதி, வே. செல்வநாயகி.

220 யார் ஓட்டம்— பி. சண்முகரத்தினம், க. விக்னேஸ்வரன், என். ஜெசந்நாதன்.

ஊசி நூல் கோத்தல்—வை. விமலா, சோ. கமலா, பொ. பரமேஸ்வரி, பி. வசந்தமலர்.

கரண்டி ஓட்டம்— ச. சரஸ்வதி, க. சரோஜா, மூ. லீலாவதி.

பாண்சாப்பிடல்— எஸ். சிவநாதன், எஸ். கணநாதன், வே யூதரா.

சாக்குகோட்டம்—கே. சுந்தரசேகரம், க. ஆனந்தன். த. கருணைகரன்.

880 யார் ஓட்டம்(மேற்பிரிவு) செ. மகேந்திரராசா, செ. மகாதேவன், கு. கணேசலிங்கம்.

---

## வானொலிநிகழ்ச்சிகள்

### வெள்ளி 8-5-64

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 பாமாலை, 6-55 இஸ்லாமியநற்சிந்தனை, 7-15 பக்திப்பாடல்கள் — யோகா சிவசுப்பிரமணியம், 7-45 மெல்லிசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 நாகஸ்வரம்.

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 6-45 ஞானாஞ்சலி, 7-15 வி. எஸ். கணேசசுந்தரம் — கதாப்பிரசங்கம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 மதிப்புரை, 9-30 நேயர்விருப்பம், 10-15 தேர்ந்தஇசை.

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15) பகல் 2-00, இரவு 7-15,

காலை 6-30 மங்களஇசை, 6-50 வாத்தியஇசை, 6-55 அருள்வாக்கு, 7-00 துதிப் பாடல்கள், 7-30 காந்தி அஞ்சலி.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 1-00 மாதர்நிகழ்ச்சி, 1-30 கீதம்பம், 1-50 வாத்திய இசை, 2-10 கே. வி. காளிதாஸ் — பாட்டு.

மாலை 5-15 களம்பூர் கே. பரசுராமபிள்ளை — நாகஸ்வரம்.

இரவு 6-20 கிராமநிகழ்ச்சிகள், 7-30 பொங்கிஎழும் பாரதம் — சித்திரம், 7-45 ராமநாதபுரம் கிருஷ்ணன் — பாட்டு, 9-15 இசைமாலை, 9-30 மெல்லிசை, 9-45 பலகணி, 10-00 திரைப்படஇசை.

---

கரபந்தாட்டப் போட்டி

## டிறிபேர்க் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்

சாவகச்சேரி, வியாழன்

சாவகச்சேரி நல்வாழ்வுச் சங்கத்தின் ஆதரவில் நகராண்மைக் கழகத்திற்கருகே உள்ள மைதானத்தில் நடைபெற்றுவரும் கரபந்தாட்டப்போட்டி, நாளை முதல் சாவகச்சேரி டிறிபேர்க்கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

கடந்த இரு தினங்களாக வீசும் பலத்த காற்றினுல் சாவகச்சேரி மணற்பிட்டியிலுள்ள மணல், கரபந்தாட்டத்திற்கு இடையூறு செய்வதாகவும் இதனுலேயே கரபந்தாட்டப் போட்டி புதிய இடத்திற்கு மாற்றப்பட்டதாவும் தெரிய வருகிறது. இனிமேல் தொடர்ந்து டிறிபேர்க்கல்லூரி மைதானத்திலேயே போட்டிகள் நடைபெறும்.

---

## பாரதீயவித்யாபவன பரீட்சை முடிவுகள்

யாழ்ப்பாணம், வெள்ளி

சென்ற மார்ச் மாதத்தில் சமஸ்கிருத விஸ்வ பரிஷத்தின் வட இலங்கைக் கேந்திரத்தினுல் யாழ்ப்பாணத்தில் நடத்தப்பட்ட பாரதீய வித்யா பவன பரீட்சைகளின் முடிவுகள் வெளிவந்திருக்கின்றன. செலவாணிக் கட்டுப்பாட்டுத் தடை காரணமாக மிகச் சில மாணவரே இம் முறை இப்பரீட்சைக்குத் தோற்றமுடிந்தது. அவர்களில் இருவர் தவிர ஏனையோர் சித்தியெய்தியிருக்கின்றனர்.

பாரதீய வித்தியா பவனத்தினுல் நடத்தப்படுகின்ற வழக்கமான நான்கு ஆரம்ப பரீட்சைகளைவிட புதிதாக "சமஸ்கிருத பாலபோத" என்னும் தொடக்கப் பரீட்சையும் இம்முறை நடத்தப்பட்டது. இதற்குரிய புதிய பாடப்புத்தகத்தைப் பெற்றுக்கொள்ள முடியாமையால் நீர்வேலி வேதாகம பாடசாலை மாணவர்கள் மாதிரிப் பிரதியாகக் கிடைத்த ஒரேயொரு புத்தகத்தைத் துணைக்கொண்டே பரீட்சை எழுதி உயர்தர சித்திகளும் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது

### பாலபோத பரீட்சை

நீர்வேலி சிவசங்கர பண்டிதர் வேதாகம பாடசாலை— ப. சிவானந்த சர்மா முதற் பிரிவு உயர்தரம், சு. கிரிஜாதேவி முதற்பிரிவு உயர்தரம், சி. ரவீந்திரன் முதற்பிரிவு உயர்தரம். ப. சௌதாமினி முதற்பிரிவு உயர்தரம், த. லலிதாம்பிகை இரண்டாம்பிரிவு, ப. முத்துக்குமாரசுவாமி இரண்டாம் பிரிவு, ஆ. கோவிந்தராஜன் மூன்ரும் பிரிவு, இ. சுவாமிநாதன் மூன்ரும் பிரிவு.

### பிராரம்ப பரீட்சை

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி— க. கோபாலன் முதற் பிரிவு உயர்தரம்.

நீர்வேலி வேதாகம பாடசாலை— ச. கந்தராஜேஸ்வர சர்மா முதற்பிரிவு உயர்தரம், ச. பசுபதீஸ்வர சர்மா மூன்ரும் பிரிவு.

### பிரவேச பரீட்சை

பிரவேச பரீட்சைக்குத் தோற்றியவர் சித்தியடையவில்லை.

---

## முதுதமிழ்...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

கையாளுகின்ருர். நகைச்சுவைக்கு இடங்கொடுக்கின்ருர். வெள்ளவத்தைக் கடலோரம், என்ற தலைப்பின் கீழ்வரும்.

'வாலறுந்த சேவலென மயிர்
குறைத்தே—சில
மடப்ப மிழந்த சிறு
மங்கையர்களும்......'

என்னும் பகுதி நகைச்சுவையின அப்படியே எடுத்துத் தருகின்றது.

கதைகளைப் பாட்டாக்கிக் குழந்தைகளைக் கவருகின்ருர் புலவர். கவிதையோடு உண்மையையும் விரவிக் கலக்கச் செய்கின்ருர். ஈற்றிலே பாலருக்குகந்த ஆட்டத்திற்கு அவர்களை அன்புடன் அழைத்து ஆட்டத்துடனே தெய்வத் தமிழ்ச் சுவையையுமூட்டி விடுகிறார்.

'கோதையரே கூடுவீர்
கோலடிக்க நாடுவீர்
போதணியும் பூவையரே
பொலிவுறு தமிழ் தேடுவீர்
—புகழ் பெற நனி ஆடுவீர்—

---

## மேதின விழாப் போட்டி முடிவுகள்

மட்டக்களப்பு, வியாழன்

மட்டக்களப்பு கம்யூனிஸ்ட் வாலிபர் சங்கத்தினுல், மேதின விழாவை முன்னிட்டு நடாத்தப்பட்ட பல்வேறு போட்டிகளின் முடிவுகள் வருமாறு:-

பேச்சுப் போட்டி: இ. தயானந்தன், சிவாநந்த வித்தியாலயம்; க. கங்கேஸ்வரி, அரசினர்கல்லூரி; வே. ஸ்ரீதரன், சிவாநந்த வித்தியாலயம்.

சைக்கிள் அஞ்சலோட்டம்: டைனமோஸ் விளையாட்டுக் கழகம்; மோகன் விளையாட்டுச் கழகம்.

5 மைல் ஓட்டம்: என், குமார ஆரியம்; எம். ஸ்மாயில்; கே சங்கரலிங்கம்.

படகோட்டப் போட்டி: கே, கிருஷ்ணபிள்ளை - சண்முகம் கோஷ்டி (கல்லடி உப்போடை), இளையதம்பி கோஷ்டி (ஆரயம்பதி).

பெண்கள் சைக்கிள் போட்டி: உஷா சவரிமுத்து (தங்கப் பதக்கம்; செல்வி திரேசியா தம்பிப்பிள்ளை; செல்வி நிர்மலா கந்தையா.

சகல போட்டிகளிலும் வெற்றியீட்டியவர்களுக்கு உதவித் தொழில் கமிஷனர் திரு. டி. பாலசிங்கத்தினுல் பரிசுகள வழங்கப்பட்டன.

---

# கிராமப்பகுதிகளில் தமிழரசு கட்சியின் மகாநாடு

கல்லூர், வெள்ளி

தமிழரசுக் கட்சியினர் தமது மகாநாடுகளை நகரங்களில் நடத்தாமல் கிராமங்களில் நடத்துவது பற்றி ஆலோசித்து வருகின்றனர். கடந்த 1 ஆண்டுகளாக கட்சியின் மகாநாடுகள் நகரங்களிலேதான் நடத்தப்பட்டு வந்தன. இந்த நிலைமையை மாற்றி ஒவ்வொரு கிராமங்களில் நடத்துவதனுல் கிராம மக்களிடையேயும் எழுச்சியை உண்டாக்கலாம என்று அவர்கள் கருதுகிருர்கள.

மிகவிரைவில் நடைபெறவிருக்கும் தமிழரசுக் கட்சியின் வருடாந்த மகாநாடு வடபகுதியிலுள்ள தேர்தல் தொகுதி ஒன்றில் நடத்தப்படுமெனத் தெரிகிறது. கட்சியின் எதிர் வரும் மகாநாட்டை தீவுப் பகுதியில் கூட்ட வேண்டும் என்று ஊர்காவற்றுறை எம். பி. திரு. வ. நவரத்தினம் தமிழரசுக் கட்சியிடம் தெரிவித்துள்ளார்: தீவுப் பகுதியில் கட்சி மகாநாடு கூட்டப்படவேண்டுமென்ற கோரிக்கை பல வருடங்களாக தீவுப்பகுதி மக்களால் கேட்கப்பட்டு வந்துள்ளதாகவும் திரு. நவரத்தினம் மேலும் கூறியிருக்கிருர்.

திருமலை, மட்டக்களப்பு, மன்ஞர், வவுனியா ஆகிய நகரங்களில் இதுவரைகாலமும் நடத்தப்பட்டுவந்த தமிழரசுக் கட்சி மகாநாடு இனி ஒவ்வொரு வருடத்திலும் கிராமங்களில் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

தமிழரசுக் கட்சி வாலிப முன்னணி மகாநாட்டைத் தொடர்ந்து கட்சியின் வருடாந்த மகாநாடு நடைபெற விருப்பதாகத் தெரிகிறது. வாலிப முன்னணி மகாநாடு இவ்வருடம் கிளிநொச்சியில் நடத்தப்படவிருக்கிறது.

---

## "சைவசமய உயர்தர கல்லூரி வேண்டும்"

நல்லூர், வெள்ளி

'தமிழ் மொழியை வளர்க்க தமிழ் பல்கலைக்கழகம் உருவாக்கப்படுவது போல சைவ சமயத்தை வளர்க்க உயர்தர சைவசமயக்கல்லூரி உண்டாக்கி தமிழில் போதனை நடத்த பெரியோர்கள் முன் வரவேண்டும்' என்று அராலி மேற்கு ஸ்ரீ கொச்சிக் காட்டுப் பிள்ளையார் கோவிலில் வழிபடுவோர் ஆட்சிமன்ற அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது:

அகில உலக மக்களின் ஒரு பகுதியினராகிய உலக தமிழர் எந்த நாட்டைச் சேர்ந்தவர்களாலும் அந்நாட்டின் நன்மையை முன் வைத்து உயிர்நாடியான மனித அடைப்படை அரசியல் உரிமையைக் காப்பாற்ற தமது கடமைகளை உறுதியுடன் செய்வது தர்மமாகும். சைவசமய உயர்தரக் கல்லூரியை நிறுவி அதற்கான உதவிகளைச் செய்து, செய்ய நாமனை வரும் முன் வரவேண்டும்

இந்த ஆட்சிமன்றத்தின் வருடாந்தக் கூட்டம் இம்மாதம் 20-ம் திகதி நடைபெறவிருக்கின்றது.

---

## 'கத்தோலிக்க இயக்கம் என்பதொன்றில்லை'

கொழும்பு, வியாழன்

"கத்தோலிக்க இயக்கம் என்ற ஒன்றை உருவாக்க காலஞ்சென்ற திரு. டி. ஆர். விஜயவர்த்தன பாடுபட்டுள்ளார் என்பதை யாரும் ஏற்றுக்கொள்ள முடியாது. தமது பத்திரிகை ஸ்தாபனத்தில் கத்தோலிக்கர்களையும், கிறிஸ்தவர்களையும் அவர்களின் தராதரத்தையும் திறமையும் வைத்தே உயர்தர பதவிகளில் அமர்த்தினர்.

கத்தோலிக்க இயக்கம் என்பதொன்று இயங்கிவருவதாகவும், அது பத்திரிகைகள்மீது செல்வாக்கைப் பிரயோகித்து வருவதாகவும் கூறப்படுவது அர்த்தமற்றது. கத்தோலிக்கர் பலர் பத்திரிகைகளில் வேலை செய்வதற்காக பத்திரிகைகள் பௌத்த விரோதமானதெனவும் தேசிய விரோதமானதெனவும் கூறுவது பொருத்தமாகாது" என நேற்று பத்திரிகைக் கமிஷன் முன் சாட்சியமளிக்கையில் இலங்கை கத்தோலிக்க சங்கத்தின் தலைவரான திரு. சிறில் ஈ எஸ். பெரேரா கியு. ஸி. தெரிவித்தார்.

"நாம் எமது சமயத்தில் அக்கறை கொண்டுள்ளது போலவே எமது நாட்டிலும் அக்கறை கொண்டுள்ளோம்" என்றும் அவர் தெரிவித்தார்.

---


விளம்பரம்

**கபிரியேல் தயாரிப்புகள்**

1. கபிரியேல் பெயின் ஓயில்
சகல நோவு, வீக்கம், வாதம் எதையும் குணமாக்கும். இன்னும் மாடுகளுக்கேற்படும் மேற்படி ரோகங்களும் குணமாகும்.

2. கபிரியேல் ஓயின்மென்ற்
சகல அவியல், புண், கட்டு எதையும் ஆற்றும் ஒரே புண்களிம்பு.

3. கபிரியேல் ஸ்பெஷல் பாம்
தடிமன், தலையிடி, சந்துளி போன்ற எல்லா வேதனைகளையும் தணிக்கவல்லவிசேஷ பாம்.

தயாரிப்பாளர்கள்.
GABRIELS, Chunnakam. 273

**விற்பனைக்கு**

வவுனியாவில் இருந்து மன்னர் ரோட்டில், ரோட்டு அருகாமையில் உள்ள காணியில் விறகு விற்பனைக்கு உண்டு. விண்ணப்பிக்கவும்: பாலசிங்கம் பிறதர், 30, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம், தொலைபேசி: 272. 275

**வாடகைக்கு**

ஸ்டான்லி ரோட்டில் கடை வாடகைக்கு உண்டு எந்த வியாபாரத்திற்கும் ஏற்றது. C/o ஈழநாடு. 293

**Tuition**

Tuition for G. C E. (Adv. Lev.) in Pure, Applied, Physics Chemistry & Sanskrit by Dr. V. Ponniah and A. Sithamparanathan of Potpathy Road, Kokuvil. 294


---

யாழ்ப்பாணம், வெள்ளி

யோகர் சுவாமிகளின் ஞாபகார்த்தமாக, வெள்ளிக்கிழமை தோறும் கிராமத்துக்குக் கிராமம் திருவிளையாடற் புராணம் போதனை செய்து மக்கள் மத்தியில் சைவப் பிரசாரஞ் செய்வது என சுவாமிகளின் அன்பர்களில் சிலர் தீர்மானித்துள்ளனர்.

# காருடன் மோதிய சைக்கிள்காரர் மரணம்

யாழ்ப்பாணம், வியாழன்

மது மயக்கத்தில் சைக்கிளில் வந்த நீராவியடியைச் சேர்ந்த கந்தையா பொன்னுத்துரை என்பவர் வீதியின் மத்தியில் வந்த காருடன் மோதி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட மூன்றும் நாள் காலமானார்.

இச்சம்பவம் பற்றி, மரண விசாரணை அதிகாரி திரு. எஸ். கனகரத்தினம் முன்னிலையில் திரு. செ. இராசரத்தினம் சாட்சியம் அளித்த போது குறிப்பிட்டதாவது:-

காலஞ் சென்றவர் பகல் 2-30 மணியளவில் மானிப்பாய் வீதியிலிருந்து வந்து காங்கேசன்துறை வீதிக்குத் திரும்பிய போது ஆறுதலாக வீதியின் மத்தியில் வந்துகொண்டிருந்த காரின் மட்காட்டில் மோதிக் கீழே விழுந்தார். காரைச் செலுத்தி வந்த டாக்டர் உடனே இறங்கி ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போய் விடுவதாகவும் தமது காரில் வரும்படியும் கேட்டார். காலஞ் சென்றவர் ஆஸ்பத்திரிக்குப் போக மறுத்து விட்டார்."

டாக்டர் ஆர். ஜே. கனகசுந்தரம் சாட்சியமளித்த போது, தமது கார்மீது மோதிக்காலஞ் சென்றவர் விழுந்த போது ஆஸ்பத்திரியில் கொண்டு போய் விடுவதாகச் சொல்லக் காலஞ் சென்றவர் மறுத்ததால் தாம் சம்பவம் பற்றிப் பொலிசில் போய் அறிவித்ததாகக் குறிப்பிட்டார்.

காலஞ் சென்றவரின் மூத்த சகோதரன் க. மாரிமுத்து சாட்சியமளித்த போது தாமும் காலஞ் சென்றவரும் ஒரே இடத்தில் வேலை செய்பவர்களென்றும் மத்தியான வேளைகளில் குடிக்கும் வழக்கம் அவருக்கு உண்டு என்றும் குறிப்பிட்டார்.

டாக்டர் தங்கராசசிங்கம் சாட்சியமளித்த போதுகாலஞ் சென்றவரை ஆஸ்பத்திரியில் அனுமதித்த பொழுது மது போதையில் காணப்பட்டாரென்றும், அவர் இருதயப்பலவீனமுடையவரென்றும் அத்துடன் விபத்திலேற்பட்ட காயங்களும் சேர்ந்தே மரணத்தை ஏற்படுத்தினதென்றும் அபிப்பிராயப்பட்டார்.

விசாரணை முடிவில் திரு. கனகரத்தினம், டாக்டர் கனகசுந்தரம் குற்றமற்றவரென்றும் காலஞ் சென்றவரின் பிழையாலேயே மரணம் சம்பவித்ததென்றும் தீர்ப்பளித்தார்.

# சைக்கிள் வாங்கப் பணம் தராததால் தற்கொலை?

## 20 வயது இளைஞனின் பரிதாப மரணம்

யாழ்ப்பாணம், வியாழன்

நீர்வேலி தெற்கைச் சேர்ந்த கந்தையா நாகமணி என்ற 20 வயது வாலிபன் சைக்கிள் வாங்க தந்தை ரூ 100/ கொடுக்கவில்லை என்றதினால் ஆத்திரமடைந்து நச்சுத்திராவகம் குடித்து மரணமானார்.

காலஞ்சென்றவரின் தந்தை என். கந்தையா மரணவிசாரணையில் சாட்சியமளித்த போது, தமது மகன் தம்மிடம் சைக்கிள் வாங்க நூறு ரூபாய் கேட்டதாகவும், பணம் கொடுக்கத் தாம் மறுத்ததும் "பார் உமக்கு ஒரு பாடம் படிப்பிக்கிறேன்" என்று கூறி அறைக்குள் ஓடிப்போய் ஒரு குப்பியிலிருந்த பொலிடோலை எடுத்துக் குடித்தாரென்றும் உடன் தேங்காய்ப்பால் கொடுத்தும் பலனளிக்கவில்லையென்றும் குறிப்பிட்டார்.

காலஞ்சென்றவர் தற்கொலை செய்துகொண்டதாக மரண விசாரணை அதிகாரி திரு. கனகரத்தினம் தீர்ப்பளித்தார்

# "சிறுபான்மைத் தமிழர் காணிபெற பெருமளவில் மனுச்செய்ய வேண்டும்"

யாழ்ப்பாணம், வியா.

"தமிழ் பேசும் மக்கள் மத்தியில் நிலப் பிரச்னையால் பாதிக்கப்படுபவர்கள் சிறுபான்மைத் தமிழ் மக்களாவர் ஆயிரக்கணக்கான சிறுபான்மைத் தமிழ் மக்கள் குடும்பங்கள் இன்றும் இரவல் காணிகளில் குடியிருந்து வருகின்றனர். ஆந்நிலைமாற குடியேற்றத்திட்டத்தில் காணிபெற முயலவேண்டும். அரசாங்க அதிபர் நெவில் ஜயவீரா அவைக் கண்டு மக்கள் முன்னேற்ற மன்றச் சார்பில் பேசிய தன் பலனாக கூடியளவு சலுகை கொடுப்பதாக அவர் வாக்குறுதி கொடுத்துள்ளார். ஆகவே காணியில்லாத சிறுபான்மைத் தமிழ்மக்கள் நூற்றுக் கணக்கில் காணிக்கு விண்ணப்பிக்கவேண்டும்.

இவ்வாறு மக்கள்முன்னேற்ற மன்றக் காரியதரிசி திரு க. நடராசா மட்டுவில் தெற்கில் ஸ்ரீகணேச நாடக மன்றத்தினால் நடாத்தப்பட்ட நாடகவிழாவில் பேசும் பொழுது குறிப்பிட்டார்.

தலைமை வகித்த சாவகச்சேரி நகரசபைத் தலைவர் திரு ஆர். டி. சிவகுரு பேசும் பொழுது ஒரு சமூகத்திலுள்ளவர் ஒருவரை யொருவர் காத்திருக்கும் மனப்பான்மை மாறினாலொழிய உண்மையான சமத்துவம் பெறமுடியாதென்றும் இன்னும் 10 வருடங்களில் தீண்டாமை என்பதற்கு இடமிருக்காதென்றும் தமது பொருளாதாரத்தை அபிவிருத்திசெய்ய ஈடுபாடு காட்டவேண்டுமென்றும் சிறுபான்மைத் தமிழ் மக்களைக் கேட்டுக்கொண்டார்.

'கொள்ளைக்காரன்' என்ற நாடகம் ஸ்ரீகணேச நாடக மன்றத்தினரால் அரங்கேற்றஞ் செய்யப்பட்டது.

## இரதவெள்ளோட்டம்

மிருசுவில், வியாழன்

உசன் கந்தசாமி கோவிலின் சொந்த நிதியிலிருந்து யாழ்ப்பாணம் திருநெல்வேலியைச் சேர்ந்த சிற்பிகளின் கைத்திறன் கொண்டு அமைக்கப்பெற்ற புதிய இரதத்தின் வெள்ளோட்டம் 8-5-64 வெள்ளிக்கிழமை காலை 8-45-க்கு நடைபெற இருக்கின்றது. அன்று திரு. சீ. விநாசித்தம்பியின் "திருப்பணி மகிமை" என்னும் பொருள் பற்றிய சொற்பொழிவும், பிரபல வித்துவான்களது மேளக்கச்சேரியும், பக்கவாத்தியங்களுடன் கூடிய பக்திப்பாடல் ஓதுதலும் முக்கிய நிகழ்ச்சிகளாக இடம் பெறுகின்றன அன்று அன்னதானம் வழங்கவுள் கோவில் தர்மகர்த்தாக்கள் சிறந்த முறையில் ஒழுங்குகம் செய்துள்ளார்கள்.

## சாஸ்திரி

புதுடில்லி, மே 6

பகைநாகர்களுக்கு பாகிஸ்தான் ஆயுத சப்ளை செய்வது ஆட்சேபனைக்குரியது என மந்திரி லால்பகதூர் சாஸ்திரி அறிவித்தார்.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலவீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1964-ம் ஆண்டு மே மாதம் 8-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

யாழ்ப்பாணத்திற்கு

# கொல்வினின் திடீர் விஜய மர்மம்

## சமசமாஜ வட்டாரங்களில் பெரும் பரபரப்பு!

யாழ்ப்பாணம், வியாழன்

**லங்கா சமசமாஜக்கட்சியின் முக்கிய தலைவர்களில் ஒருவரான டாக்டர் கொல்வின் ஆர். டி' சில்வா நேற்று 1-30 மணியளவில் யாழ்தேவியில் யாழ்ப்பாணம் வந்து மத்திய கமிட்டி அங்கத்தவர் திரு. ஆர். ஆர். தர்மரத்தினத்தைச் சந்தித்துப் பேச்சுவார்த்தைகள் நடாத்தி விட்டு திடீரென 4 மணிக்கு விமானம் மூலம் திரும்பிய மர்மம் பற்றி சமசமாஜக்கட்சி வட்டாரங்களில் பெரிய பரபரப்பு ஏற்பட்டுள்ளது.**

வடபகுதிக்காக மத்திய கமிட்டியில் அங்கம் வகிக்கும் திரு. தர்மரத்தினம் என். எம். மின் கூட்டாட்சிக் கொள்கைக்கும் அதற்கான எட்மண்டின் எதிர்ப்புக் கொள்கைக்கும் மத்திய பாதையில் செல்பவரென மதிக்கப்படுவர். கொல்வினும் என். எம்.மிற்கு ஆதரவானவர். வருகிற 9-ம் திகதி சனிக்கிழமை லங்கா சமசமாஜக் கட்சியின் மத்திய கமிட்டி கூட்டாட்சி பற்றித் தீர்மானிக்கவிருக்கிறது. என். எம். யாழ்ப்பாணம் வந்து சென்றவுடன் கொல்வினும் வந்தது திரு. தர்மரத்தினத்தை என். எம். மின் வழியில் திருப்புவதற்கு என்று சில சமசமாஜக்கட்சி அங்கத்தவர்கள் நம்புவதால் திரு. தர்மரத்தினத்தை எட்மண்ட் சமரக்கொடியின் வழியில் திருப்பும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனரென்று நம்பகமான வட்டாரங்களில் சொல்லப்பட்டது. என். எம்.முக்கு ஆதரவான ஒரு சமசமாஜ பிரமுகரை நமது நிருபர் கேட்டபொழுது டாக்டர் கொல்வின் நண்பர்களைச் சந்திக்கவே திடீர் விஜயஞ்செய்ததாக அறிவித்தார். ஆனால் திரு. தர்மரத்தினத்தை என். எம்மிற்காக ஸ்திரப்படுத்துவதற்காகவே கொல்வின் இத்திடீர் விஜயம் என்று எட்மண்ட் கோஷ்டியினர் அபிப்பிராயப்படுகின்றனர். என். எம் முக்காக வாக்களிக்கக்கூடிய திரு. தர்மரத்தினம் மத்திய கமிட்டிக்குப் போகாது தடுக்கும் முயற்சியும் கையாளப்படுகின்றதெனச் சொல்லப்படுகின்றது.

## கவர்னர் சம்பளம் பெறமாட்டார்

சென்னை, மே 6

தமிழ் நாட்டின் புதிய கவர்னரான மைசூர் மகாராஜா தமக்கு எவ்வித சம்பளமும் வேண்டாம் என முடிவு செய்திருக்கிறார். இன்று வெளியான அரசாங்க அறிவிப்பு கவர்னரின் முடிவுபற்றிக் குறிப்பிட்டது.

## யுதாண்ட்-சக்ளா சந்திப்பு

நியுயோர்க், மே. 6

ஐ. நா. சென்றிருக்கும் இந்தியக் கல்வி மந்திரி திரு. சக்ளா, யுதாண்டைச் சந்தித்துப் பேசினார். யுதாண்ட் இந்தியா வந்து ஷேக் அப்துல்லாவுடன் பேசவேண்டும் என பாகிஸ்தான் அயல்நாட்டு மந்திரி புட்டோ தெரிவித்தது பற்றி அவர் யுதாண்டுடன் பேசியதாயும், உல்லாசப் பிரயாணியாக காஷ்மீருக்கு அவர் வருவதையும் இந்தியா வரவேற்குமென்றும், ஆனால் வெளியார் தலையீட்டை அது பொறுக்காது என்றும் சக்ளா யுதாண்டிடம் தெரிவித்ததாகக் கூறப்பட்டது.

## ஒத்திவைப்பு

புதுடில்லி, மே 6

லோகசபைக் கூட்டம் இன்று ஒத்திவைக்கப்பட்டது. வருகிற 27-ம் திகதி சபையின் விசேஷ கூட்டம் நடைபெறுமென அறிவிக்கப்பட்டது.

# கிராமசபை தேர்தல் ரத்துக்கும் எனக்கும் சம்பந்தமில்லை

## கிளிநொச்சி எம். பி. விளக்கம்

யாழ்ப்பாணம், வியாழன்

கிளிநொச்சி கிராமசபை தெரிவு நடப்பதற்கு முதல் நாள் தேர்தலை ரத்துச் செய்த ஸ்தல ஸ்தாபன மந்திரியின் நடவடிக்கையை வன்மையாகக் கண்டிப்பதுடன், தாமே இத்தேர்தலை ரத்துச் செய்ய மந்திரியைக் கோரியதாக பரப்பப்படும் அரசியல் பிரசாரம் எவ்வித ஆதாரமுமற்றதென்றும் இடதுசாரிகளின் வழமையான தந்திர அரசியல் பிரசாரமென்றும் கிளிநொச்சி எம். பி. திரு. அ. சிவசுந்தரம் நமது நிருபரிடம் கூறினார்.

திரு. சிவசுந்தரம் மேலும் குறிப்பிட்டதாவது:-

வட்டாரங்களை விஸ்தரிப்பதற்காகவே ஸ்தல ஸ்தாபன மந்திரி தேர்தலை ரத்துச் செய்வதாகக் காரணங்காட்டியிருந்தார். வட்டார விஸ்தரிப்புத் தேவையானதே. ஆனால் தேர்தல் நடைபெறுவதற்கு முதல் நாள் தேர்தலை ரத்துச் செய்வதாக அறிவிப்பது மிக ஏமாற்றத்தைக் கொடுக்கக் கூடியது, இது ஜனநாயகத்துக்கே முரணானது. இதற்குத் தூண்டுதலாக நானுமிருந்தேன் என்பது அவதூறானது. தமது சொந்தத் தேவைக்காக இடதுசாரி அரசியல்வாதிகள் அரசியல் தந்திரம் செய்கிறார்கள். அக்குற்றச்சாட்டை இவர்கள் இயலுமானால் நிரூபித்துக் காண்பிக்கட்டும் அதுவே நீதி!

## மாணவ ஆசிரியர் தெரிவு

யாழ்ப்பாணம், வியாழன்

விரைவில் வெளிவரவிருக்கும் தமிழ் மாணவ ஆசிரியர் தெரிவில் சிறுபான்மைத் தமிழ் மக்களுக்குச் சலுகை காட்டுவதாக கல்வி இலாகா நிலைய உதவி வித்தியாதிபதி மக்கள் முன்னேற்ற மன்றத்தினருக்கு வாக்குறுதி கொடுத்திருப்பதாகத் தெரிகிறது.

## இந்தியா தயாரித்த சூபர்ஸானிக்

புதுடில்லி, மே 6

இந்தியாவிலேயே முழுமையாகத் தயாரிக்கப்பட்ட நான்கு எச். எஸ். 24 ரக சூபர் ஸானிக் போர் விமானங்கள் வருகிற ஞாயிற்றுக்கிழமை விமானப்படையிடம் ஒப்படைக்கப்படவிருக்கிறது. இந்த நவீன ஜெட் போர் விமானங்கள் பெங்களூரில் தயாரிக்கப்பட்டன.

## மரத்திலிருந்து விழுந்தவர் மரணம்

யாழ்ப்பாணம், வியாழன்

திருநெல்வேலி கிழக்கைச் சேர்ந்த வைரவநாதர் தம்பு (60 வயது) புளிய மரத்திலிருந்து தவறி விழுந்ததனால் ஏற்பட்ட காயங் காரணமாகக் காலமானார்.

விபத்தினால் மரணம் சம்பவித்ததென்று மரண விசாரணை அதிகாரி திரு. எஸ். கனகரத்தினம் தீர்ப்பளித்தார்.

## தொடர்ந்து மழை

கொழும்பு, புதன்

நாட்டின் தென் மேற்குப் பகுதியில் தாழ்ந்த வட்டாரங்களில் இடைவிடாது மழை பெய்துவருகிறதென்று அறிவிக்கப்படுகிறது.

## கொழும்பில் புயலும் மழையும்

கொழும்பு, புதன்

சென்ற வார இறுதியில் பெய்த கடும் மழையினாலும் வீசிய புயலினாலும் பெரும் சேதங்கள் ஏற்பட்டுள்ளன. பல மரங்கள் பாதைகளில் விழுந்து போக்குவரத்தைத் தடை செய்துள்ளது.

சனிக்கிழமை பெய்த கடும் காற்றிற்குப் பின் கொழும்பிலுள்ள அதிகமான தொலைபேசிகள் இன்னமும் சரியான முறையில் இயங்கத் தொடங்கவில்லை.

இதுசம்பந்தமாக தபால் பகுதியினரை விசாரித்த பொழுது பழையபடி தொலைபேசி இயங்கும் நாளை தங்களால் திட்டவட்டமாகக் கூற முடியாது என்று தெரிவித்தனர்.

## "அரசாங்கம தனித்து நிற்க முடியும்"

அம்பாறை, புதன்

கூட்டரசாங்க அமைப்பு எதுவுமின்றி ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அரசாங்கம் தனித்து இயங்கமுடியுமென்று பலப்பிட்டிய எம். பி. திரு. லக்ஷ்மண் டி' சில்வா தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் டாக்டர் என். எம். பெரேரா, டாக்டர் கொல்வின் ஆர். டி' சில்வா, டாக்டர் விக்கிரமசிங்கா, திரு. பிலிப் குணவர்த்தன ஆகியோர் கூட்டரசாங்கத்தை விரும்புகிறார்களென்றும், அடுத்த பொதுத் தேர்தலில் அவர்கள் தோல்வியடைவது நிச்சயமென்றும் கூறினார்.

## இலக்கிய பேரவை அனுதாபம்

கொழும்பு, புதன்

"பாரதிக்குப் பிறகு தலைசிறந்த கவிஞனாக விளங்கிய பாரதிதாசன் மறைவு தமிழ் மக்களுக்கு ஒரு சரியான பேரிடியைக் கொடுத்துள்ளது. இது போன்ற கவிஞனைப் படைக்க இன்னம் எத்தனை ஆண்டுகள் ஆகுமோ'' என்று கலை இலக்கியப் பேரவையின் செயலாளர் திரு. என். இரத்தினசிங்கம் சென்றகிழமை நடந்த செயற்குழுக் கூட்டத்தின் போது தெரிவித்தார்.

ஆடி மாதத்தில் மணிவாசகர் விழாவை சிறப்பாகக் கொண்டாட வேண்டுமென்ற தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.